ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

06.10.2010 - மலர் 07, இதழ் 31




## பூமியைத் தாக்கவுள்ள சூரியப் புயல்



## உலகின் புகழ்பெற்ற மிருகக் காட்சிச்சாலைகள்



## உலக அஞ்சல் தினம்



## பிரான்சியப் புரட்சி ஏற்படக் காரணம்



விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைக்கு புதிய ஆள்பதி ஒருவர் நியமனம் பெற்று வந்தார். அவரின் பெயர் கஸ்டாப் விலெம் பாரொன்வேன் இமுப் என்பதாகும். இவரின் வருகையால் கிளர்ச்சியில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அந்த ஆள்பதியோ அதில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினார். அறவிடப்பட்ட அதிக வரித்தொகையை நீக்கினார். மன்னனுடன் நட்புறவு பேணிக் காலத்தைக் கழிக்கத் தீர்மானித்தார். அவர் எதிர்பார்த்தது நடந்தேறியது. கறுவா சீவியோர் இணக்கத்திற்கு வந்தனர். அரச னுக்கு உரித்தான இடங்களில் கறுவா சீவ மன்ன னும் இடமளித்தான். ஆள்பதியோ பெறுமதி நிறைந்த பரிசுப்பொருட்கள் பலவற்றுடன், தூதுவர் குழுவொன்றை மன்னனை சந்திக்கும்பொருட்டு அனுப்பி வைத்தார். மன்னனின் திசாபதிகளோ கிளர்ச்சிகளுக்கு தாங்கள் எவ்விதத்திலும்

## அமைதியான ஆள்பதி

சம்பந்தப்படவில்லை என்பதுபோல் கூறினர். மன்னனின் கட்டளைப்படியே, இக்கிளர்ச்சி ஏற்பட்டது என கிளர்ச்சியாளர்கள் கூறியது முற்றிலும் தவறானது என அவர்கள் கூறினர்.

வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னனும் தன் தந்தையைப் போலவே கத்தோலிக்க குருமார்களுக்கு விசேட சலுகைகளை வழங்கிக் கவனித்தார்.

ஜோசப்வாஸ் அடிகளாரிடம் மிகுந்த மரியாதையுடனும் கருணை மனப்பான்மையுடனும் நடந்து கொண்டார். இலங்கையில் கத்தோலிக்க மதத்திற்கு புத்துயிர் பெற்றுத் தந்தது ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கனின் காலத்திலேயே என இன்றும் கத்தோலிக்க பக்திமான்கள் கருதுகின்றனர். ஒல்லாந்த பிரதேசங்களில் கத்தோலிக்கர்கள் மிகவும் இம்சைப்படுத்தப்பட்டதோடு, சொல் லொணாத் துயரங்களையும் அனுபவித்தனர். தமது பிரதேசங்களில் நுழைந்து மதக்கடமை களிலும் திருப்பலி ஒப்புக்கொடுப்பதிலும் ஆர்வம் காட்டிய குருமார்களுக்கு மன்னன் பாதுகாப்பு வழங்கினார். ஒல்லாந்தர்களோ, அவர்களைக் கைது செய்ய எத்தனித்தனர். ஒல்லாந்தப் பிரதேசங்களில் குருமார்களை கைது செய்ய முயற்சிக்கையில் அவர்கள் மன்னனின் பிரதேசத்திற்குத் தப்பி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

விஜய்
Vijey
கொழும்பு - 02
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



இம்முறை நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவர்களில் ஆறு மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் பரீட்சை சுட்டெண்ணுக்குப் பதிலாக, தங்கள் பெயர்களை எழுதியிருந்தமையினாலேயே இவ்வாறு பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். பதுளை மாவட்டத்தில் 4 மாணவர்களினதும் கண்டி மாவட்ட மாணவர் ஒருவரினதும் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரினதும் பெறுபேறுகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியிலிருந்து 3,15,000 மாணவர்கள் தோற்றியிருந்ததோடு, அவர்களில் 31,000 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சித்தியடைந்தவர்களில் 15,000 பேர் மாணவர் உதவித் தொகையைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

# ஒக்:1 இலிருந்து மீண்டும் 'ருபெல்லா' தடுப்பூசி



ருபெல்லா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. விருப்பமானவர்களுக்கு மாத்திரமே மேற்படி தடுப்பூசி ஏற்றப்படும் என்பதோடு, கட்டாயப்படுத்தப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சிகிச்சை நிலையங்களில் ருபெல்லா தடுப்பூசி வழங்கப்படமாட்டாது எனவும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் சிகிச்சை நிலையங்களில் மாத்திரமே மேற்படி தடுப்பூசி ஏற்றப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற விசேட மருத்துவ நிபுணர்களின் மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13 தொடக்கம் 45 வயது வரையிலானவர்கள் தத்தமது விருப்பத்தின்படி, சுகாதார மருத்துவ அதிகாரிகளின் சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று ருபெல்லா தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும். கடந்த வருடம் ருபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்ட இரண்டு மாணவியர் மரணமடைந்த சம்பவத்தையடுத்து இந்தத் தடுப்பூசியை ஏற்றுவது நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாண சாகித்திய விழா

## ஹட்டனில் கண்காட்சி

மத்திய மாகாணத்தில் நடைபெறவுள்ள தமிழ் சாகித்திய விழாவையொட்டி ஹட்டன் நகரில் கண்காட்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.



மத்திய மாகாண இந்துக் கலாசார கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் ஒக்டோபர் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் ஹட்டன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி தமிழ் சாகித்திய விழாவில் 30 கண்காட்சிக் கூடங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'மலையக மாட்சி' என்ற தொனிப்பொருளிலான இந்தக் கண்காட்சியில் மலையகத்தின் கல்வி, கலாசாரம், தமிழ்மொழி, பொருளாதாரம், இலக்கியம், வரலாறு, நாடகக்கலை போன்றவை தொடர்பான பலவிதமான நூல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இக்கண்காட்சிக்கான செயற்பாடுகள் நுவரெலியா மாவட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு ஒழிப்பு இரண்டாவது வாரம் ஒக்: 1-7 வரை




ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து 7ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு ஒழிப்பு இரண்டாவது வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவுகின்ற பருவமழையுடன் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பரவுவதற்கான அபாயம் இருப்பதனால், மீண்டும் டெங்கு ஒழிப்பு வாரமொன்றைப் பிரகடனப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களினால் டெங்கு நுளம்புகள் பெருகுவது கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

## இல.1 தொடக்கம் 5 வரையிலான பாகங்கள்




இலங்கை வரைபடத்தின் இல.1 தொடக்கம் 5 வரையிலான பாகங்கள் இங்கு மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. மேற்படி பாகங்களை தவறவிட்டவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், முறைப்படி 12 பாகங்களையும் ஏற்கனவே சேகரித்து வைத்துள்ளவர்கள் இவற்றைக் கவனத்தில்கொள்ளத் தேவையில்லை.

**கூப்பன்:**

**சேகரிப்போம்-சுவீகரிப்போம்!**

பெயர் : ..............................

வீட்டு முகவரி : ..............................

..............................

தொ.பே. இல : ..............................

பாடசாலை / தரம் : ..............................

: ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்/திகதி

அனுப்ப வேண்டிய முகவரி: பரிசுப்போட்டி, 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

60 DAYS BASIC / SPOKEN ENGLISH / தபால் மூல ஆங்கில பாடநெறி

5ம் ஆண்டு புலமை பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

எமது இந்த BASIC / SPOKEN ENGLISH அடிப்படையும் பேச்சுப் பயிற்சி பாடநெறியானது 7 வயது தொடக்கம் 12 வயது வரையான சின்னம் சிறார்க்கு சிறந்த பாடநெறியாகும்

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

பாடநெறியை தொடரும் உங்களுக்கு

அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும்

30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE

P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் முத்திரைகளில் மீன் சின்னம்

உலகின் பல்வேறு நாடுகளில் வெளியிடப்பட்ட முத்திரைகளில் பெரும்பாலும் அரசியல் தலைவர்களின் உருவம், அரசியல் இலச்சினைகள் என்பனவற்றையே முன்னர் காணக்கூடியதாக இருந்தது. எனினும், தற்காலத்தில் பல்வேறு தலைப்புகளுடன் கூடிய முத்திரைகளைக் காணக்கூடியதாக உள்ளது. ஏதாவது, ஒரு தலைப்பின்கீழ் குருவிகள், வண்ணத்துப்பூச்சிகள், வேறு உயிரினங்கள், விமானங்கள் போன்றவற்றைக்கொண்ட முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. ஒரு தலைப்பைக்கொண்ட முத்திரை ஒருமுறை மாத்திரமே வெளியிடப்படும். இலங்கையில் வெளியிடப்பட்ட தலைப்புடனான மீன்களை இலச்சினையாகக் கொண்ட முத்திரைகள் பற்றிய விளக்கம் வருமாறு:

## வரி நாம்பல்




இந்த உருவத்தைக்கொண்ட முத்திரை 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் பெறுமதி 2 சதமாகும். அதன் அளவு மி.மீற்றர் 27.5×33 ஆகும். இந்த மீன் ஆழமில்லாத பகுதியில் வாழும். கடற் காளானை நோக்கி உணவையும் பாதுகாப்பையும் தேடிச் செல்லும். இதன் உடல் அழகானது, கவர்ச்சியான நிறங்களைக்கொண்டது. விசித்திரமான உயிரினமெனவும் இது கொள்ளப்படுகிறது.

## கெண்டை




1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி இந்த முத்திரை வெளியிடப்பட்டது. 3 சதம் பெறுமதியுடைய இந்த முத்திரையின் அளவு 27.5×33 ஆகும். கெண்டை மீன் நன்னீரில் வாழும் உயிரினமாகும். இதன் உடல் 8 அங்குல நீளமுடையது. இலங்கையிலும் தென் இந்தியாவிலும் இது வசிக்கிறது. உணவுக்காக இது பிடிக்கப்படுகிறது.

## புள்ளித்தோட்டி




இலங்கைக்கே உரிய நன்னீர் உயிரினம் இதுவாகும். இதன் உடல் 6 சென்றிமீற்றர் வரை வளரும். வயிற்றுப்பகுதி சற்று அகன்று காணப்படும். கறுப்பு நிறப் புள்ளிகளுடன், உடல் அழகாகக் காணப்படும். நிழலுள்ள இடங்களில் ஆழமற்ற, தெளிவான, ஓடும் நீரில் வசிக்கும். 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி இந்த முத்திரை வெளியிடப்பட்டது. இதன் பெறுமதி 25 சதம். அளவு 31×25 மி.மீ.




## சூறை




இது பெரும்பாலும் சமுத்திரத்தில் வாழும். இந்த மீன் வேகமாக நீந்திச் செல்லும் தன்மையுடையது. கூட்டமாக கடலில் மிகவும் நீண்டதூரம் நீந்திச் செல்வதாகக் கூறப்படுகிறது. இந்த மீன் உணவுக்கும் பயன்படுகிறது. அவ்வாறே, மாசிக் கருவாடு தயாரிக்கவும் பயன்படுகிறது. இந்த மீன் உருவத்தைக்கொண்ட முத்திரை 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் பெறுமதி 30 சதம். அதன் அளவு 27.5×33 ஆகும்.

## செவ்வாய்க் கெண்டை




இது இலங்கைக்கே உரிய நன்னீர் மீனாகும். உடல் 5-6 சென்ரி மீற்றர் வரை வளர்ச்சியடையும். பெண் மீனை விட, ஆண் மீன் அழகிய நிறமுடையது. நிழலுள்ள, ஆழமற்ற மெதுவாகப் பாய்ந்து செல்லும் நீர்நிலைகளில் வாழும் தன்மையுடையது. ஈர வலயத்தில் மட்டுமே இது காணப்படும். இந்த மீனின் வாய்ப்பகுதி செந்நிறமாகக் காணப்படுவதால் 'செவ்வாய்க்கெண்டை' எனப் பெயர் பெறுகிறது. இந்த மீனின் உருவத்தைக்கொண்ட முத்திரை 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் பெறுமதி இரண்டு ரூபாவாகும். அதன் அளவு மி.மீற்றர் 27.5×33 ஆகும்.

## அழகிய சொர்க்கம்




இந்த மீனின் உருவமுடைய முத்திரை 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இரண்டு ரூபா பெறுமதியான இந்த முத்திரையின் அளவு 33×25 மி.மீற்றராகும். இலங்கைக்கே சிறப்பாக உரிய இந்த மீனினம் வனாந்தரங்களை அண்மித்த, ஆழமற்ற, மெதுவாகப் பாய்ந்து செல்லும் அருவிகளில் வாழும். தாவரங்கள் வேர்கள் உள்ள இடங்களில் வசிப்பதை இவை மிக விரும்பும். இந்த மீன்கள் ஈரலிப்பான பகுதிகளில் மாத்திரமே காணப்படும். இதன் உடலின் இரு பக்கமும் கறுப்புப் புள்ளிகள் வரிசையாகக் காணப்படும். உடல் 2.5-3 செ.மீற்றர் வரை வளர்ச்சியடையும்.

## சேல் கெண்டை




1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட 'சேல் கெண்டை' மீன் முத்திரையின் பெறுமதி எட்டு ரூபாவாகும். அதன் அளவு மி.மீற்றர் 31×25 ஆகும். இந்த மீன் இலங்கைக்கே சிறப்பாக உரியதாகும். ஆழமான, கற்களைக் கொண்ட மிக வேகமாகப் பாய்ந்து செல்லும் நீரில் இது வாழும். உடல் 30 சென்ரிமீற்றர் வரை வளரும். உடலின் இருபக்கமும் சாம்பல் நிறமாகக் காணப்படும். சில வேளைகளில் இருபுறமும் சிவப்பு நிறத்தைப் போன்ற நிறத்தையும் பெறுவதுண்டு. உடலில் கறுப்பு நிற அடையாளம் காணப்படும். நாடியின்மேல் சிறிய தடிப்புக் காணப்படும்.

## இராட்சதத் திமிங்கிலம்




1983 பெப்ரவரி 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த முத்திரையின் பெறுமதி ரூபா பத்து ஆகும். அதன் அளவு 40.64×21.81 மி.மீற்றர். இது பாலூட்டிகள் வகையில் அடங்கும். உடல் பொதுவாக 60 அடி வரை நீளமானது. நீந்துவதிலும்,கரணம் அடிப்பதிலும் திறமை வாய்ந்ததாகும். இந்த மீனின் தலையின் முன் பகுதியில் எண்ணெயுடனான குழி உண்டு. காற்றுப் படும்போது அதிலுள்ள எண்ணெய் கனமாகும். இந்த மீன்கள் கூட்டமாக வாழும் இயல்புடையன.

## கோழிக் கெண்டை




இது இலங்கைக்கே உரிய நன்னீர் மீனாகும். வனாந்தரத்தை அண்டிய நிழலுள்ள, ஆழமற்ற சிறு நீரோடைகளில் வாழும். இந்த மீன்கள் ஈரலிப்பான வலயத்தில் காணப்படுகின்றன. உடல் 4 செ.மீற்றர் வரை வளரும். உடல் செம்மண் நிறத்தைப் போன்றது. சிறு குழுக்களாக வாழும். மெதுவாக நீந்திச் செல்லும். இதன் இறக்கைகள் சிவப்பு நிறத்தை உடையவை. உடலின் இருபுறமும் நாவல் நிறத்தை ஒத்த கறுப்புக்கோடுகள் காணப்படும். ஆண் மீன்கள், பெண் மீன்களைவிட, நிறத்தில் சிறந்து காணப்படும். 1990 செப்டெம்பர் 14 ஆம் திகதி இந்த முத்திரை வெளியிடப்பட்டது. இதன் பெறுமதி 20 ரூபாவாகும். அளவு மி.மீற்றர் 31×25 ஆகும்.

## கடல்பன்றி




பாலூட்டிகள் வரிசையில் அடங்கும். கடற் பன்றியின் உருவத்தைக் கொண்ட முத்திரை 1983 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் பெறுமதி இரண்டு ரூபா. அளவு 40.64×29.81 மி.மீற்றர். ஒரு சிறகால் குஞ்சைப் பிடித்துக்கொண்டு பால் கொடுத்தல் இதன் பழக்கமாகும். 'கடற்கன்னி' பற்றிய வாய்மொழிக் கதைகள் இதனை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவையெனக் கூறப்படுகிறது. அவுஸ்திரேலியா மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மூன்று வகையான 'கடற்பன்றிகள்' வாழ்கின்றன. இலங்கையின் வடமேற்குக் கடற்கரைப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் இவை வாழ்வதாகக் கூறப்படுகின்றது. இதனை 'டுகொங்' என்று மலேசியாவில் அழைக்கின்றனர்.

## டொல்ஃபின் (Bottle nose Dolphin)




பாலூட்டிகள் வரிசையில் அடங்கும் டொல்ஃபின் நீந்துவதிலும் கரணம் அடிப்பதிலும் வல்லமையுடையவை. இதனால், சாகஸத் தடாகங்களில் காட்சிகளுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பாகக் கரணம் அடித்துத் தமது திறமையை வெளிக்காட்ட இவை விரும்புகின்றன. அவ்வாறே, விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவும் விரும்புகின்றன. பொதுவாக, இது 12 அடி வரையில் வளரும். நாடி முன்னால் நீண்டிருக்கும். 1983 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி டொல்ஃபின் உருவமுடைய முத்திரை வெளியிடப்பட்டது. இதன் பெறுமதி 50 சதமாகும். இதன் அளவு 40.64×29.81 மில்லிமீற்றராகும்.

## கூன் முதுகுத் திமிங்கிலம்




இது பாலூட்டிகள் வரிசையில் அடங்கும். உடலின் 1/3 பங்கு நீளமான பெரிய இறக்கைகள் இதற்குண்டு. நீந்தும்போது உடல் வளைவதால் இது 'கூன்முதுகுத் திமிங்கிலம்' எனப் பெயர் பெற்றிருக்கலாம். இந்தத் திமிங்கிலம் 50 அடி நீளம் வரை வளர இடமுண்டு. அத்துடன், இது நீரின் மேற்பரப்பில் நீந்தக்கூடியது. இவ்வாறு நீந்தும்போது முதுகைக் கூனிக்கொண்டு கரணம் அடித்து நீரின் அடியில் செல்லும். அவ்வேளையில் வெளியில் தெரியும் அதனது வால் பெரிய குருவியொன்று தன் சிறகுகளை விரித்திருப்பது போலிருக்கும். ரூபா 2.50 பெறுமதியான இந்த முத்திரை 1983 பெப்ரவரி 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதன் அளவு மி.மீற்றர் 40.64×29.81 ஆகும்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி முகாமைத்துவம் - 23

## கற்றலுக்கான ஆலோசனைகள்

# தொழில்நுட்பக் கல்வியின் அவசியம்

கல்வியானது அனுபவத்தாலும் கிடைக்கலாம்; ஆசான் மூலமும் கிடைக்கலாம். கல்வியின் மூலம் அறிவைப் பெற்றுத் தம் வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டியது மாணாக்கர்களின் கடமை. கல்வியின் நோக்கம் வாழ்வைச் சீர்படுத்துவது மட்டுமன்று; வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும்தான். ஒருவன் வாழத் தொழில் புரிய வேண்டியது அவசியம். தொழில் புரிய வேண்டுமாயின், தொழில் அறிவு அவசியம். இத்தொழில் அறிவைப் புகட்டும் கல்வியே 'தொழில்நுட்பக் கல்வி' என அழைக்கப்படுகின்றது.

மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் பொறுப்பு பாடசாலைகளையே சாரும். பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அங்கு 9 ஆம் தரத்திலும் சாதாரண தரத்திலும் தொழில்நுட்பக் கல்வியை ஒரு மாணவன் கற்றுக் கொள்கிறான். இவை பாடசாலை மட்டத்தில் தொழில்நுட்ப அறிவினை ஊட்டுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப முயற்சிகளாகும்.







தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிப்பதற்காக இலங்கையில் பல தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. இவை தவிர; திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் தொழில்நுட்பக் கல்வி புகட்டப்படுகின்றது. மேலும், வேறு பல வெளிநாட்டு தொழில்நுட்பக் கல்லூரிகளும் தனியார் தொழில்நுட்பக் கல்லூரிகளும் பயிற்சி நிலையங்களும் இங்குள்ளன.

சாதாரணமாக, மாணவர் ஒருவர் ஒரு பாடத்தைக் கற்பதைவிட, தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பதானது செய்முறையுடன்கூடிய அறிவைத் தருகின்றது. இது அவரது தொழிலுக்குச் சாதகமாக அமையும். இலங்கையில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரத் தேர்வு, பல்கலைக்கழகத் தேர்வு முதலியன போட்டிப் பரீட்சைகள் மூலம் நடைபெறுகின்றன. பெருமளவு மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சை மூலம் நடக்கும் உயர்தரத் தேர்விலும் உயர்தரப் பரீட்சை மூலம் நடக்கும் பல்கலைக்கழகத் தேர்விலும் சித்தியடையத் தவறுகின்றனர்.

இந்நிலையில்,இவர்கள் வாழ்க்கையை வெறுத்து மோசமான தீர்மானங்களை எடுத்துவிடுகின்றனர். இவ்வாறாக உயர்தரத் தேர்வு, பல்கலைக்கழகத் தேர்வு ஆகியவற்றில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி மிகவும் பயன்படும். தொழில்நுட்பத்துறையில் ஈடுபாடுள்ள மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் தொழில்நுட்பக் கல்வியைக் கற்பதானது நன்மை பயக்கும்.



தொழில்நுட்பக் கல்வியைக் கற்பவர் கற்றுவிட்டு, அதை தனது தொழிலாகக் கொண்டு இயங்கும்போது, அது வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கிறது. இன்று வெளிநாடுகளிலும் தொழில்நுட்பக் கல்வி கற்றவர்களுக்கு நல்ல மதிப்பு இருக்கின்றது. அதுமட்டுமன்றி, பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வி கற்று வெளிவரும் ஒரு மாணவர் அதற்காக செலவு செய்த காலத்தைவிட, தொழில்நுட்பக் கல்வியைக் கற்று வெளியேறும் ஒரு மாணவர் அதற்காக குறைந்த காலத்தையே செலவு செய்கிறார்.

எனவே, பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மேலதிகமாக தொழில்நுட்பக் கல்வியிலும் கவனம் செலுத்துவதானது எதிர்காலத்தில் சிறந்த பலனைப் பெற்றுத்தரும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா


# செல்ஸியஸும் ஃபரன்ஹைட்டும்

**மனித உடலின் உஷ்ணநிலையை அளப்பதற்கு வெப்பமானி (Thermometer) உபயோகிக்கப்படுகின்றது. பொதுவாக, வெப்பநிலையை அளக்கும் அலகு 'சென்டிகிரேட்' (Centigrade) ஆகும். இது 'செல்ஸியஸ்' என்ற பெயர்கொண்டும் அழைக்கப்படுகின்றது. தவிர, 'ஃபரன்ஹைட்' முறையிலும் வெப்பநிலை அளவீடு மேற்கொள்ளப்படுகின்றது.**



எண்டர்ஸ் செல்ஸியஸ்

பாதரச வெப்பமானி, மருத்துவ வெப்பமானி, மதுசார வெப்பமானி, டிஜிட்டல் வெப்பமானி என்றெல்லாம் பலவகைப்பட்ட வெப்பமானிகள் தற்போது பாவனையில் உள்ளன. செல்ஸியஸ் முறையில் மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை 36.9°C (37°C) எனக் கணிக்கப்படுகின்றது. மனித உடலில் இந்த சராசரி வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றபோதே 'காய்ச்சல்' ஏற்படுகின்றது.




ஃபரன்ஹைட், செல்ஸியஸ் வெப்பமானிகள்

## செல்ஸியஸ் அறிமுகம்



டெப்ரியல் ஃபரன்ஹைட்

உடல் வெப்பநிலையை சென்டிகிரேட் வெப்பமானி மூலம் அறிந்துகொள்ளும் முறையைக் கண்டறிந்து, அதனை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் எண்டர்ஸ் செல்ஸியஸ் (Anders Celsius) ஆவார். இவர் 1701 ஆம் ஆண்டு பிறந்தார். 1731 இல் உப்ஸலா பல்கலைக்கழகத்தில் வானியல் பேராசிரியராகக் கடமையாற்றினார். அங்குள்ள வானிலை ஆய்வுநிலையத்தை நிறுவியவரும் இவரேயாவார். 1742 இல் இவர் உலகிற்கு அறிமுகப்படுத்திய சென்டிகிரேட் வெப்பமானி அளவு முறையே இன்றளவிலும் உலகெங்கும் பாவனையில் உள்ளது.

ஆரம்பத்தில் சென்டிகிரேட் அளவுமுறை உறைநிலை 100°C என்றும் கொதிநிலை 0°C என்றும் கொள்ளப்பட்டபோதிலும், 1750 இல் எண்டர்ஸ் செல்ஸியஸின் மாணவரான மார்டின் ஸ்ட்ரோமர் (Martin Stromer) என்பவரே அதனை தலைகீழாக இன்று பாவனையிலுள்ளவாறு உறைநிலை 0°C என்றும் கொதிநிலை 100°C என்றும் மாற்றியமைத்தார்.



## ஃபரன்ஹைட் அறிமுகம்





ஃபரன்ஹைட் முறையிலும் வெப்பநிலையை அறியலாம். பாதரசம் உள்ள வெப்பமானியை 1781 இல் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் டி.கெப்ரியல் ஃபரன்ஹைட் (Fahrenheit) ஆவார். இவர் 1686 இல் ஃபிரான்ஸில் பிறந்தார். ஃபரன்ஹைட் முறையில் மனித உடலின் சாதாரண வெப்பநிலை 98.42°F ஆக இருக்கின்றது.

ஃபரன்ஹைட் முறையில் உறைநிலை 32°F ஆகவும் கொதிநிலை 212°F ஆகவும் கணிக்கப்படுகின்றது.

மிகக் குறைந்த வெப்பநிலையையும் மிகக்கூடிய வெப்பநிலையையும் பாதரசம் கொண்டு அளவிட முடிவதே, வெப்பமானியில் பாதரசம் பயன்படுத்துவதன் ரகசியமாகும். செல்ஸியஸில் இருக்கும் வெப்பநிலையை ஃபரன்ஹைட்டாக மாற்ற வேண்டுமாயின், அதனை 9 ஆல் பெருக்கி 5 ஆல் வகுத்து 32 ஐக் கூட்ட வேண்டும். அதேபோல், ஃபரன்ஹைட்டில் இருந்து செல்ஸியஸிற்கு மாற்ற, 32 ஐக் கழித்து 5 ஆல் பெருக்கி 9 ஆல் வகுக்க வேண்டும்.

-ஐ.ஏ.எஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சியப் புர

**பிரான்ஸ் என தற்போது அழைக்கப்படும் நாடு முன்னர் கோல் தேசம் என அழைக்கப்பட்டது. நவீன யுகத்தில் ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளில் பிரான்ஸ் முக்கிய இடத்தை வகிக்கிறது. பிரித்தானியாவில் நாடாளுமன்ற ஜனநாயகம் ஆரம்பமாகிய பொழுதிலும் பிரான்சில் அவ்வாறான சீர்திருத்தங்கள் ஏற்படவில்லை. இதனால், இங்கு 'பிரான்சியப் புரட்சி' ஏற்பட்டது. பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள், அதன் விளைவுகள் என்பன பற்றி இங்கு பார்ப்போம்**

## முடியாட்சி முறை

பிரான்சியப் புரட்சி ஏற்பட்ட போது, (கி.பி 1789) பிரான்ஸ், பூர்போம் வம்ச அரசனான 16 ஆம் லூயி மன்னனால் ஆட்சி செய்யப் பட்டு வந்தது. 16 ஆம் லூயி மன்ன ருக்கு முன்னர் ஆட்சியாளராக இருந்த 14 ஆம், 15 ஆம் லூயி மன்னர்களின் செயற்பாடுகள் பிரான்சியப் புரட்சிக்கு வித்திட்டன. 14ஆம் லூயி மன்னனின் காலத்தில் பிரான்சில் வரம்பற்ற அதிகாரங் களைக்கொண்ட முடியாட்சி முறை நிலவியது. அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த 15 ஆம் லூயி, 16 ஆம் லூயி மன்னர்களின் ஆட்சிகளும் அவ்வாறே அமைந்தன. அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய நிலைமை யுடன் இதனை ஒப்பிடுகையில் பிரான்சின் நிலைமை மோசமாகவே இருந்தது. மேலும், பிரான்ஸ் பல யுத்தங்களிலும் ஈடுபட்டு இருந்தது. நாட்டின் சட்டத்துறை யினதும் நிர்வாகத்துறையினதும் தலைவ னாக அரசன் விளங்கினான். அரச ஆலோசகர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், தூதுவர்கள், படைத்தலை வர்கள் உட்பட்ட உயர் அதிகாரிகளை நியமிக்கவும் விலக்கவும் அரசன் அதிகா ரம் படைத்தவனாக விளங்கினான். அவ்வாறே போர், அமைதி என்பனவற்றைப் பிரகடனப்படுத்தல், படையை ஒழுங்கமைத்தல், ஆயுதங் களைத் தயாரித்தல் என்பன அரசனின் விருப்பப்படியே நடைபெற்றன. 16 ஆம் லூயி மன்னனின் காலத்தில் இருந்த அதிகாரிகள் செயற்படாதவர்களாக இருந்தனர். அவர்களை அதிகாரத்திலி ருந்து நீக்கினால் நட்டஈடு வழங்க வேண் டிய நிலை இருந்தது. அத்துடன், அரசன் உட்பட, உயர் அதிகாரிகளின் கைகளில் அனைத்து அதிகாரங்களும் சலுகைகளும் குவிந்திருந்தன. அதனால், அரசன் உட்பட, குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரங்களும் சலுகைகளும் குவிந்த சர்வாதிகார ஆட்சி நிலவியது.

## மக்கள் பிரதிநிதிகள் சபை பலவீனமடைதல்

பிரான்சின் முடியாட்சியிடம் அதிகமான அதிகாரங்கள் இருந்ததால், மக்கள் பிரதிநிதிகள் சபை பலவீனமடைந்தது. பிரான்சின் மக்கள் பிரதிநிதிகள் சபை 'ஸ்டேட் ஜெனரல்' என அழைக்கப்பட்டது. மதகுருமார்கள், பிரபுக்கள், சாதா ரண குடிமக்கள் ஆகியோரே அதில் பிரதிநிதிகளாக இருந்தனர். கி.பி 1614 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படவில்லை. அரசன் சுயமாகச் செயற்பட்டுள்ளான். இதுவும் பிரான்சியப் புரட்சிக்கு காரணமாகியது.

## மாகாண நிர்வாகம் மத்திய அரசின்கீழ்

மக்கள் பிரதிநிதிகள் சபை பலவீனம டைந்ததால் மாகாண நிர்வாகம் மத்திய அரசின்கீழ் வந்தது. இதனால், மக்கள் செயற்பாடுகள் தாமதமடைந்தன. ஆலய மொன்றைப் புனரமைப்புச் செய்வதற்கு முன்வரும் ஒருவர், அதற்கான உதவி யைப் பெற்றுக்கொள்வதற்குப் பத்து ஆண்டுகள் சென்றன. இதன்மூலம் செயற்பாடுகளின் மந்தநிலையை அறியக் கூடியதாக உள்ளது.

## நீதிமன்றமும் நீதித்துறையும் மோசமடைதல்

லூயி மன்னர்களின்கீழ் பிரான்சின் நீதிமன்றமும் நீதித்துறையும் மோசமான நிலையை அடைந்தன. நீதிமன்றத்தில் அரசன், அதிஉயர் நிலையில் இருந்தான். இதனால், கீழ் நீதிமன்றங்களால் வழங்கப் படும் தீர்ப்புக்களை நிராகரிக்க அரசனால் முடியுமானதாக இருந்தது. மேலும், வேறு நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக் குகளையும் அரச நீதிமன்றத்திற்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. அத்தோடு, எந்தவொரு நபரையும் விசாரணையின்றிக் கைது செய்யக்கூடிய நிலையும் இருந்தது. அரசனின் தனிப்பட்ட, அரசியல் எதிரிகளை அடக்குவதற்கே, இவ்வாறான முறை கையாளப்பட்டது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 'பஸ்டீல்' எனும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். பிரான்ஸ் நாட்டின் முடியாட்சியின் அநீதியின் சின்னமாக விளங்கியது 'பஸ்டீல்' சிறைக்கூடம்.

## வெளிநாட்டு யுத்தங்கள்

கி.பி 1756-1763 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற ஏழாண்டு யுத்தத்தில் 15 ஆம் லூயி மன்னன் ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் இணைந்து இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போர் செய்தான். பிரான்ஸ் அதிலும் தோல்வியடைந்தது. அவ்வாறே,1776 ஆம் ஆண்டு அமெரிக்கா இங்கிலாந்திற்கு எதிராகப் போர் செய்தபோது, பிரான்ஸ் அமெரிக்காவுக்கு உதவியளித்தது. இதில் அமெரிக்கா வெற்றியடைந்தபோதிலும் பிரான்சிற்கு அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. இவ்வாறு நீண்டகாலமா கப் பிரான்ஸ் வெளிநாட்டு யுத்தங்களில் ஈடுபட்டதால் தனது பொருளாதாரங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன், தனது பெருமையையும் இழந்து அவமானத்திற்குள்ளாகியது. இதனால், முடியாட்சி மீது மக்களின் நம்பிக்கையும் மதிப்பும் தளர்ச்சி அடைந் தது. இது பிரான்சியப் புரட்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## மொரிபாவின் செயற்பாடுகள்


16 ஆம் லூயி மன்னன் கி.பி 1774 ஆம் ஆண்டு இருபது வயதுடையவராக இருந்தார். அவரது ஆலோசகராக மொரிபா எனும் 74 வயதுடைய முன்னைநாள் அமைச்சர் விளங்கினார். அவர் பழைமைவாதியாக இருந்ததன் காரணமாக, பிரான்சிற்குத் தேவையான புதிய மாற்றங்களை அறிமுகம் செய்யத் தவறிவிட்டார். எனினும், நிதி அமைச்சர்களாக இருந்த டர்கோ, நெக்கர் என்போர் நிர்வாகத்தை சீரமைத்தல், விவசாயிகளின் நிலைமை களை உயர்த்துதல், பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகை யில் வரி அறிவிடுதல் பற்றி மீளாய்வு செய்தல் போன்ற கருத்துக்களை முன் வைத்தனர். ஆனால், அரசன் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. இந்தச் சீர்திருத்தங்களால் தமது சலுகைகள் பறிபோய் விடுமென மதகுருமாரும் பிரபுக்களும் கருதி, டர்கோ, நெக்கர் ஆகியோரை பதவியிலிருந்து நீக்கும்படி கோரினர். அதுவும் நிறைவேறியது.

## 16 ஆம் லூயி மன்னனின் மனைவியின் செயற்பாடு

16 ஆம் லூயி மன்னனின் மனைவி மாரி அன்டனட் ஆஸ்திரியப் பெண்ணா வாள். அவளுக்கு பிரான்சிய சமுதாயத் தைப் பற்றியோ, நிர்வாகத்தைப் பற்றியோ எவ்வித அறிவும் இருக்கவில்லை. அவளே டர்கோ, நெக்கர் ஆகிய அமைச் சர்களைப் பதவி நீக்கினாள். மேலும், மக்கள் கிளர்ச்சி செய்த வேளையில் "பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங் கள்" என்று கூறினாள். அவளது செயல் களும் புரட்சிக்குக் காரணமாகின.

## வரி அறவிட்டமை

மக்களிடம் அறவிடப்பட்ட வரியே பிரான்சின் முக்கிய வருமானமாக இருந் தது. வரி அறவிடும் முறை பொது மக்களைப் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கியது. இம்முறையில் சலுகைகள் பெற்ற குருமார்களும் பிரபுக்களும் வரி செலுத்துவதிலிருந்து விடுபட்டனர். மக்கள், குறிப்பாக விவசாயிகள், அரசாங்கத்திற்கும், தேவாலயத்திற்கும் நில உரிமையாளர்களான பிரபுக்களுக் கும் வரி செலுத்த வேண்டியவர்களாக இருந்தனர். 'டெலி' எனப்படும் வரி ஆண்டுக்கு ஆண்டு பிரதேசத்திற் குப் பிரதேசம் வேறுபட்டது. அது நிலத்திற் கென பெறப்பட் டது விசேடமாக



பெஸ்டில் சிறைச்சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்சி ஏற்படக் காரணம்













கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் இதனைச் செலுத்த வேண்டியவர்களா பிருந்தனர்.

ஒல்லாந்து, பிரித்தானியா ஆகிய நாடுகளில் இக்காலகட்டத்தில் வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிக்கும் மக்கள் பிரிவினர் தோன்றினர். ஆனால், பிரான்சில் அவ்வாறான சமூக, பொருளாதார நிலை தோன்றுவதற்குப் பிரபுக்களும் குருமார்களும் தடையாக இருந்தனர். மேலும், பிரான்சின் மத்திய வகுப்பினர் இங்கிலாந்தின் மத்திய வகுப்பினரைப் போன்று அரசியலில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் அற்றவர்களாக இருந்தனர்.

## 'ஏடின்' உடன்படிக்கை

கி.பி 1786 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கும் பிரான்சிற்கும் இடையே 'ஏடின்' உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, பிரான்சின் வைனுக்கு இங்கிலாந்தும் இங்கிலாந்தின் துணிகளுக்குப் பிரான்சும் வரி அறவிடவில்லை. இங்கிலாந்தில் தொழில் புரட்சியின் விளைவாக உற்பத்தி செய்யப்பட்ட உயர்ரகத் துணிகள் பிரான்சில் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டன. எனினும், பிரான்சில் உற்பத்தி செய்யப்பட்ட வைன் இங்கிலாந்தில் குறைந்த விலையில் விநியோகிக்கப்படவில்லை. இங்கிலாந்தின் துணி பிரான்சில் ஏராளமாகக் குவிந்ததால், பிரான்சின் புடைவைக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்தது.

## திறைசேரி வெறுமையடைதல்

16 ஆம் லூயி மன்னனின் ஆட்சிக்காலத்தில் திறைசேரி வெறுமையடைந்தது. பிரான்ஸ் அதுவரை பெற்றிருந்த கடனைச் செலுத்துவதற்குப் பிரான்சின் வருமானத்தில் அரைப்பங்கிற்கும் மேல் செலவாகியது. பிரான்சில் சலுகை பெற்ற பிரிவினரின் சம்பளம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. ஆனால், கீழ்மட்டத்தில் இருந்தோரதும் உழைப்பாளிகளதும் சம்பளம் மிகவும் தாழ்நிலையில் இருந்தது.

## மானிய முறையை விரும்பாமை

பிரான்சிய சமுதாயம் மத்திய வகுப்பு விவசாயிகள், தொழிலாளர்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரித்திருந்தது. மத்திய வகுப்பில் வர்த்தகர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அடங்கினர். இவர்கள் எவ்வித சலுகைகளையும் அனுபவிக்கவில்லை. இதனால், மத்திய வகுப்பினர் நிலமானிய முறையை ஆதரிக்கவில்லை. பிரான்சின் மொத்த மக்கள் தொகையில் 90% விவசாயிகள், அவர்களிலும் பல பிரிவினர் காணப்பட்டனர். நிலத்தைக் கூலி கொடுத்துப் பெற்று விவசாயம் செய்தோர், அன்றாட சம்பளம் பெற்றோர், தமது சிறிய நிலங்களில் பயிர் செய்தோர் பிரபுக்களின் நிலங்களில் பணிபுரிந்தோர் என பல்வேறு நிலைப்பட்டவர்களும் அதிகளவில் வரி செலுத்த வேண்டியவர்களாக இருந்தனர். பிரபுக்கள் வேட்டையாடும்போதும், குதிரைகளில் செல்லும் போதும் விவசாயிகளின் விளைச்சலுக்கு சேதம் ஏற்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலை விவசாயிகளுக்கு இருக்கவில்லை.

கி.பி 1767 இல் அரச ஆணை மூலம் பிரான்சில் நிலஅடைப்பு முறை ஏற்பட்டது. இதனால், விவசாயிகளின் மந்தைகள் மேய்வதற்குக்கூட, நிலம் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் விவசாயிகளும் மன்னனுக்கு எதிராகக் கிளம்பினர்.

### ❖ பிரான்ஸ் நாட்டுத் தத்துவஞானிகளின் கருத்துக்கள்

18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் அறிவு வளர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடமாக விளங்கியது. இந்த அறிவு வளர்ச்சியின் செல்வாக்கிற்குட்பட்ட சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும் பகுத்தறிவின் அடிப்படையில் அப்போது நிலவி வந்த அரசியல், சமூக, சமய அமைப்புகளை ஆராய்ந்து விமர்சிக்க ஆரம்பித்தனர். ரூசோ,வோல்டேயர், மொன்டஸ்கியூ என்போர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். பாமர மக்களின் நிலையை உயர்த்த வேண்டும். அவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் போன்ற முற்போக்குக் கருத்துக்கள் இத்தத்துவஞானிகளால் வலியுறுத்தப்பட்டன. இவை மக்கள் மனதில் புரட்சி உணர்வை ஏற்படுத்தி புரட்சி தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியது.

### ❖ அமெரிக்க சுதந்திரப் போரின் தூண்டுதல்

1776 இல் அமெரிக்கக் குடியேற்றங்கள் பிரித்தானியாவுக்கு எதிராக சுதந்திரப் போரை ஆரம்பித்தன. இப்போரில் பிரான்ஸ் அமெரிக்காவுக்கு ஆதரவாகப் பண உதவி, படை உதவி செய்தது. இதனால், அதிக செல்வம் விரயமாகியது. அத்தோடு, பிரெஞ்ச் மன்னரின் எதேச்சதிகாரத்தை ஒழித்துக்கட்ட முடியும் என்ற நம்பிக்கை பிரான்சியருக்கு ஏற்பட்டது.

### ❖ உடன் காரணம்

1789 ஆம் ஆண்டு 175 வருடங்கள் கூட்டப்படாத பிரான்சியப் நாடாளு மன்றம் (ஸ்டேட் ஜெனரல்) கூட்டப்பட்டது. இது புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது.



## பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

1. பிரான்சியப் புரட்சி பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பிரான்சில் பூர்போன் மன்னராட்சி முடிவடைந்து குடியாட்சி முறை ஏற்பட்டது. பிரான்ஸ் சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மறைந்தன. நாடு முழுவதிலும் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே மாதிரியான நிர்வாக முறையும் சட்டதிட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

2. பிரான்சியப் புரட்சி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அரிய மூன்று கருத்துக்களை உலகிற்கு அளித்தது. இக்கருத்துக்கள் உலகின் ஏனைய நாடுகளின் உணர்வுகளைத் தூண்டிவிட்டன. பிற்காலத்தில் பல உலக நாடுகளில் மக்களாட்சி முறை தோன்றவும் தேசியம் வளரவும், அந்நியர் ஆட்சி ஒழிக்கப்படவும் இக்கோட்பாடுகள் தூண்டுதலாக விளங்கின.

3. புரட்சியின்போது வெளியிடப்பட்ட மனித உரிமை அறிக்கையின்படி, தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட்டது. மத வழிபாட்டுரிமை,பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை என்பன கிடைத்தன.

4. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டின்படி, இயங்கி வந்த வல்லாட்சி முறையை அரசாங்கம் ஒழித்தது. மாறாக, மக்களின் செல்வாக்கு உயர்த்தப்பட்டு, அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் அமைவதற்கு வழிவகுத்தது.

5. ஆட்சி செய்யும் பொறுப்பு மக்களுக்கே உண்டு என்ற உண்மை உணர்த்தப்பட்டது. மக்களின் இறைமைத் தன்மை முக்கியத்துவம் பெற்றது.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புருண்டி

**அரசு:** குடியரசு.
**சுதந்திரம்:** பெல்ஜியத்திடமிருந்து 1962 ஜூலை முதலாம் திகதி.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா யு புருண்டி (Republic of Burundi).
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம், ஜூலை 1.
**ஜனாதிபதி** (2005): பியரே நுருன்ஸிஸா.

## புவியியல்

புருண்டி, முற்றிலும் நிலங்களால் சூழப்பட்ட மிகச் சிறியதொரு நாடு. வடகிழக்கே தங்கனிக்கா ஏரி அமைந்துள்ளது.அதிக மலைகள் நிறைந்தொரு நாடாகும். மரங்கள் நிறைந்த மிட்டும்பா மலைகள் மேற்கே அமைந்துள்ளன. தன்சானியா ஏரிக்கரையில் சவன்னா புல்வெளிகளைக் காணலாம். இந்நாடு தன்சானியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, ருவண்டா, கிழக்கு மத்திய ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் அமைந்துள்ளது. கண்யாறு, மலஹராசி, ருஸிஸி மற்றும் ருவுபு ஆகிய முக்கிய நதிகள் உள்ளிட்ட பல நதிகள் இங்கு பாய்கின்றன.





புஜும்புரா சர்வதேச விமானநிலையம்

அத்துடன், கொஹாஹா,ரிவேரோ, தங்கனிக்கா ஆகிய ஏரிகளும் காணப்படுகின்றன.

**மொத்தப்பரப்பு:** 10,745 ச.மைல் (27,830 ச.கி.மீற்றர்).
**மொத்த நிலப்பரப்பு:** 9,903 ச.மைல் (25,649 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 16 மாகாணங்கள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** புஜும்புரா.
**ஏனைய பெரிய நகரம்:** கிடேகா.
**உயர் மலைச்சிகரம்:** ஹேஹா மலை (8759 அடி);
**தாழ் மையம்:** தங்கனிக்கா ஏரி (2,532 அடி ஆழம்).



ஜனாதிபதி





தேசிய இலச்சினை

**மக்கள் தொகை** (2010): 9,863,117.
**நாணயம்:** புருண்டி ஃப்ரேங்.
**மொழிகள்:** கிருண்டி மற்றும் பிரெஞ்ச் (உத்தியோகபூர்வ மொழிகள்), ஸ்வாஹிலி.
**இனக்குழுக்கள்:** ஹூட்டு 85%, டுட்ஸி 14%, ட்வா 1%.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 62%, உள்ளூர் மத நம்பிக்கைகள் 23%, இஸ்லாம் 10%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 5%.
**எழுத்தறிவு** (2006): 59.3%.
**இணையத்தளக் குறியீடு:** .bi
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 257



ருவுபு தேசிய பூங்கா

**தேசிய கீதம்**

Burundi bwacu, Burundi buhire,
Shinga icumu mu mashinga,
Gaba intahe y'ubugabo ku bugingo.
Warapfunywe ntiwapfuye,…..என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

புருண்டி நாட்டின் பூர்வீக குடிகள் ட்வா மற்றும் பிக்மிஸ் மக்கள் ஆவர். ஆனால், இன்று அவர்களின் தொகையோ, மொத்த சனத்தொகையில் 1% மாத்திரமே. முற்காலத்தில் ஜேர்மனியின் கிழக்காபிரிக்காவின் ஒரு பகுதியாக இருந்த புருண்டியை பெல்ஜியம் வெற்றி கொண்டதன்பின், 1923 இல் சர்வதேச சங்கத்தின் கண்காணிப்பில் பெல்ஜியத்தின் ஆளுகையின்கீழ் இருந்தது. 1962 இல் பெல்ஜியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1972-1973 மற்றும் 1980 களில் இனக்கலவரம் ஏற்பட்டு பேரழிவை ஏற்படுத்தியது.

முதல் பொதுத்தேர்தல் 1993 இல் நடைபெற்றது. ஆட்சித்தலைமை சிறுபான்மையினரான டுட்ஸி இனத்தவர் வசமானது. ஆனால், மக்களில் பெரும்பான்மையானோர் ஹூட்டு இனத்தவர்கள். இதனால், டுட்ஸி-ஹூட்டு இனங்களுக்கிடையில் கலவரம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். 1993 இல் அதிபர் பதவிக்கான ஜனநாயகத் தேர்தலில் ஹூட்டு இனத்தைச் சேர்ந்தவர் அதிபரானார். 1996 இல் மேஜர் பியரே புயோபோ தலைமையிலான டுட்ஸி ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. 2004 இல் ஹூட்டு தலைவர் பியரே நுருன்ஸிஸா அதிபரானார்.













தங்கனிக்கா ஏரி

## காலநிலை

மலைப்பிரதேசங்களிலும் மத்திய மேட்டு நிலங்களிலும் குளிர் காலநிலை நிலவுகின்றது. வடமேற்கே அமைந்துள்ள ருஸிஸி ஆற்றுப்பள்ளத்தாக்கிலும் நாட்டின் குறுக்கேயும் அதிகளவு மழை பொழிகின்றது. பெப்ரவரி முதல் மே மாதம் வரை ஈரளிப்பான காலநிலையும் ஜூன்-ஒகஸ்ட் வரை உலர் காலநிலையும் நிலவுகின்றது.

## கலாசாரம்

உணவு வகைகளில் வற்றாளை, சோளம், அவரை வகைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. குடும்ப மற்றும் பாரம்பரிய கலாசார நிகழ்வுகளில் மேளங்களை முழங்கச் செய்வது அவர்களுக்கே உரிய தனித்தன்மையாகும். உல்லாசப் பயணிகளை கவரும் கைத்திறன் பொருட்களைச் செய்வதில் புருண்டியர்கள் வல்லவர்கள். கலைத்திறன்மிகு கூடைகளை பின்னுவதும் முகமூடிகள், கேடயங்கள், மட்பாண்டங்கள் செய்வதும் அவர்களின் கைவந்த கலையாகும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2003): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்- 23,900; செல்லிடத் தொலைபேசிகள்- 64,000. **வானொலி நிலையங்கள்** (2001): FM 4, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 22, இணையத்தளப் பாவனையாளர்கள் (2003) : 14,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** மொத்தம் 14,480 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 1028 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை 13,452 கி.மீற்றர்). **நீர்வழிப் போக்குவரத்து** (2004): முக்கியமாக தங்கனிக்கா ஏரியில் நடைபெறுகிறது. **துறையும் துறைமுகமும்:** புஜும்புரா. **விமான நிலையங்கள்** (2004): 8.



தலைநகரின் செய்மைத் தோற்றம்

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 35%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, பருத்தி, தேயிலை, சோளம், மரவள்ளி, வற்றாளை, வாழைப்பழம், மாட்டிறைச்சி, பால். **தொழிலாளர் தொகை** (2002): 2.99 மில்லியன் (விவசாயம் 93.6%, கைத்தொழில் 2.3%, சேவை 4.1%). **கைத்தொழில்கள்:** கம்பளி, பாதணிகள், சவர்க்காரம், உணவுற்பத்திப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** நிக்கல், யுரேனியம், செம்பு, பயிர்ச்செய்கை நிலம், நீர்மின் வலு, சுண்ணக்கல்.



சாகா கடற்கரை

**ஏற்றுமதிகள்** (2009): கோப்பி, தேயிலை, சீனி, பருத்தி. **இறக்குமதிகள்:** மூலப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், உணவுற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஜேர்மனி, பெல்ஜியம், பாகிஸ்தான், ஐக்கிய அமெரிக்கா, ருவண்டா, கென்யா, தன்சானியா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

❖ கிபாபி வெந்நீர் ஊற்றுக்கள் ❖ ருஸிஸி தேசிய பூங்கா ❖ ருவுபு தேசிய பூங்கா ❖ மகம்பா இயற்கையகம் ❖ கரேரா நீர்வீழ்ச்சி ❖ சாகா கடற்கரை ❖ தங்கனிக்கா ஏரி ❖ புருண்டி நினைவுச் சின்னம் ❖ புருண்டி நூதனசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு பாதிப்பிலிருந்து மனிதகுலத்தை காப்பாற்றிய மருத்துவர் பேண்டிங்

இன்று நீரிழிவு எனும் நோய் ஒரு சாதாரண குறைபாடாக மாறிவிட்டது. ஆனால், சுமார் 75 வருடங்களுக்கு முன் நிலைமை அப்படி இருக்கவில்லை. நீரிழிவு ஒருவருக்கு ஏற்பட்டால் மரணம் நிச்சயம் என்ற கொடிய நிலையே உலகெங்கும் இருந்தது. காரணம் அதற்குரிய சிகிச்சை ஏதும் அக்காலத்தில் கண்டுபிடிக்கப் படாமையே.



### பேண்டிங்கின் தோற்றம்

1891 ஆம் ஆண்டு கெனடாவிலுள்ள அன்டோரியா மாநிலத்தில் ஆலிஸ்டன் என்ற கிராமத்தில் பேண்டிங் பிறந்தார். இவர் படிக்கும் காலத்தில் சாதாரணமான ஒரு மாணவராகவே இருந்தார்.

ஒருமுறை அவர் வசித்து வந்த இடத்தில் உள்ள ஒரு வீட்டின் கூரை மீது ஏறி சிலர் பணியாற்றிக்கொண்டிருந்த போது, அக்கூரை முறிந்து இருவர் கீழே விழுந்தனர். இதனைக் கண்ட சிறுவன் பேண்டிங் விரைவாகச்செயற்பட்டு மருத்துவரை அழைத்து வந்தான். அதனால், அடிபட்ட இருவரும் காப்பாற்றப்பட்டனர். அடிபட்ட இருவரையும் காப்பாற்றிய மருத்துவரைப் பார்த்த சிறுவன் பேண்டிங்கிற்கு தானும் எதிர்காலத்தில் மருத்துவராக வர வேண்டும் என்ற உறுதி மனதில் தோன்றியது. எனினும், மதகுருவாக வரவேண்டும் என்ற பெற்றோரின் வற்புறுத்தல் அதிகரிக்கவே, முதலில் மத குருவாகவும் பின்னர் மருத்துவராகவும் தொழில் செய்யலாம் என முடிவெடுத்தார். எனினும், மத குருவாகப் பணிபுரிய அழைப்பு வராத காரணத்தால் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து குறைந்த மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சி பெற்றார்.

### மருத்துவப் பணி

முதலில் கெனடா நாட்டு ராணுவத்தில் மருத்துவராகப் பணிபுரிந்தார். அப்பொழுது போர்க்களத்தில் காயமடைந்தோருக்கு தகுந்த சிகிச்சை அளித்துக் காப்பாற்றினார். ஒருமுறை போர்க்களத்தில் அவருடைய வலது கையில் ஒரு துப்பாக்கி ரவை பாய்ந்து விட்டது. ஆயினும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார். இதனால், அவருடைய கையை வெட்டி எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும், தன் மன உறுதியின் நிமித்தம் தன்னம்பிக்கையோடு தொடர்ந்து சிகிச்சை மேற்கொண்டு தனது கையைக் காப்பாற்றிக் கொண்டார். போர்க்களத்தில் அவர் ஆற்றிய மருத்துவ சேவைகளுக்காக பேண்டிங்கிற்கு 'போர்ச்சிலுவை' பதக்கம் வழங்கப்பட்டது.

### பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பணி


சிறிது காலத்திற்குப் பின்னர் பேண்டிங் லண்டன் நகரத்திற்குச் சென்றார். அங்கே மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்தார். ஆனால், அது வெற்றிகரமாக இயங்கவில்லை. இதன் காரணமாக, அவர் ஒரு பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியை மேற்கொண்டார். அச்சமயத்தில் 'பான்கிரியாஸ்' என்ற சுரப்பியைப் பற்றியும் அதன் பணிகளைப் பற்றியுமான கட்டுரை ஒன்றைப் படித்தார். அக்காலத்தில் 'பான்கிரியாஸ்' சுரக்கும் ஒருவித நீருக்கு நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு என்று பலரும் நம்பினர். பல விஞ்ஞானிகளின் இக்கூற்று ஒருபோதும் நிரூபிக்கப்படவில்லை. தொடர்ந்து நீரிழிவு நோய்க்கு எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் பலர் அந்நோய்க்குப் பலியானார்கள்.

### இன்சுலின் கண்டுபிடிப்பு

பேண்டிங் தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். ஆராய்ச்சிகளை முடிக்க இரண்டு மாத அவகாசமே தரப்பட்டிருந்தது. ஆனால், இரண்டு மாதகாலத்தில் தனது ஆராய்ச்சிகளை முடிக்க அவரால் முடியவில்லை. எனினும், மனம் தளராமல் தொடர்ந்து தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இறுதியாக நீரிழிவு நோய்க்குரிய மருந்தை அவரால் கண்டுபிடிக்க முடிந்தது. தான் கண்டுபிடித்த மருந்திற்கு 'ஐஸ்லெட்டின்' என்று பெயரையும் சூட்டினார்.



உதவியாளர் பெஸ்டிக்குடன் பேண்டிங்





பேராசிரியர் இம்மருந்திற்கு 'இன்சுலின்' என்ற பெயரைச் சூட்டினார்.

இன்சுலின் மருந்தைக் கண்டுபிடித்தமைக்காக, 1934 ஆம் ஆண்டில் பேண்டிங் 'நொபெல்' பரிசைப் பெற்றார். நொபெல் பரிசானது பேண்டிங் மற்றும் மெக்லிட் இருவருக்கும் வழங்கப்பட்டது. தனது ஆராய்ச்சிகளில் பெரிதும் உதவிய பெஸ்டிற்கும் 'நொபெல்' பரிசு கொடுக்கப்படல் வேண்டும் என்று பேண்டிங் கேட்டுக்கொண்டார். ஆனால், பேண்டிங்கின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எனவே, தனக்குக் கிடைத்த பரிசுத் தொகையில் பாதித்தொகையை தன்னுடைய உதவியாளர் பெஸ்டிற்கு அளித்தார் பேண்டிங்.

நீரிழிவு நோயின் பாதிப்பிலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றிய பேண்டிங் தொடர்ந்து தனது மருத்துவ சேவையைச் செய்து வந்தார். 1941 இல் ஒரு விமான விபத்தில் சிக்கி தனது 50 ஆவது வயதில் அகால மரணமானார். மருத்துவ உலகம் பேண்டிங்கின் நாமத்தை என்றும் நினைவு கூருகின்றது. (அ)

---



## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

### தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS

## விஜய் உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2010

### வினைத்திறனை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்

அரச நிறுவனமாகிய தேசிய உற்பத்தித்திறன் நிறுவனமானது இம்முறையும் 2010 ஆம் ஆண்டிற்கான சித்திரப் போட்டியை நடத்துகின்றது.

**'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்'** என்ற தலைப்பிலேயே இந்த சுவரொட்டி (போஸ்டர்) சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. நமது வீட்டில் வினைத்திறனை ஒழுங்காக கடைப்பிடித்தால்தான் நமது பாடசாலை, காரியாலயம் சமூகம் நாடு போன்றவற்றையும் வினைத்திறன் மிக்கதாக ஆக்கமுடியும். எனவே, வீட்டில் வினைத்திறனை மேற்கொண்டால் அது நாட்டின் மேம்பாட்டிற்கும் பயன்மிக்கதாக அமையும்.

எனவே, கீழ் காணப்படும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு உங்களுடைய சுவரொட்டி சித்திரத்தை வரையமுடியும்.

1. வீட்டுத்தோட்டம் வினைத்திறன் மிக்க இடமாக எடுத்துக்காட்டி சித்திரம் வரையலாம்.
2. உங்களுடைய வீட்டை முறையாக அமைத்து இருக்கின்ற இட வசதிக்குள் கூடிய பயனைப் பெறுவதைக் காட்டும் சித்திரமாக அமையலாம்.
3. வீட்டின் பாதுகாப்பை எடுத்துக்காட்டும் விதமான சித்திரம்.
4. வீட்டின் அவசியமற்றவற்றை அப்புறப்படுதலும் அவசியமானவற்றை ஒழுங்குபடுத்தி சீராக வைத்தல்.
5. வீடானது சுத்தமும் சுகாதாரமும் மிக்கதாக இருப்பதான உணர்வை ஏற்படுத்தும் விதமான சித்திரம்.
6. வீட்டில் பொருளாதார ஸ்தீர நிலையானது, உயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குதல்.
7. வாழ்க்கையை இயல்பான தன்மை மிக்கதாக எடுத்துக்கொள்ளத்தக்க வழிமுறைகளை காட்டும் சித்திரங்கள்.
8. வீட்டில் நிதி கையாளுகை மற்றும் சிக்கனத்தை உணர்த்தும் சித்திரங்கள்.
9. நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதை உணர்த்தும் சித்திரங்கள்.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

பாடசாலை பிரிவு 1 மற்றும் 2

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

பாடசாலை பிரிவு 3

1 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்

1 ஆவது பரிசு - ரூபா 30,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. i. மாவட்டம் ..........
   போட்டிப் பிரிவு ..........
2. i. முதல் பெயர் .......... (ஆங்கில தனியெழுத்தில்)
   ii. முழுப் பெயர் ..........
3. i. முகவரி .......... (ஆங்கில தனியெழுத்தில்)
   ..........
   ..........
   ii. தொலைபேசி ..........
4. வயது ..........
5. i. பாடசாலையின் பெயர்/முகவரி
   ..........
   ..........
   ii. வகுப்பு (தரம்) ..........
6. பல்கலைக்கழக மாணவர்களாயின்
   i. பல்கலைக்கழகத்தின் பெயர்
   ..........
   ii. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
   ..........

..........
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..........
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2010.10.15**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

ஊடக அனுசரணை: விஜய் விஜய

பரிசு அனுசரணை: O-KAY

மேலதிக விபரங்களுக்கு:- தொலைபேசி 011-2812163/6, ஃபெக்ஸ்: 011- 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் (சென்ற வாரத் தொடர்ச்சி.....)

பெயர்: ........................................................... நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

7. ஆறு கால்கள் உள்ள பிராணி எது?
   1. சிலந்தி 2. பூரான் 3. நுளம்பு
8. தனிப்பட்ட முறையில் பயன்படும் பொருள் எது?
   1. நிலைக்கண்ணாடி 2. கைக்குட்டை 3. கத்தி
9. தோற் கருவி எது?



10. தேசிய கொடியில் தமிழரைக் குறிக்கும் நிறம் எது?
    1. சிவப்பு 2. செம்மஞ்சள் 3. பச்சை
11. அரச இலச்சினையில் காணப்படும் தர்மச்சக்கரம் வெளிப்படுத்தும் கருத்து?
    1. தூய்மை 2. சௌபாக்கியம் 3. தர்மம்

05. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சிங்களச் சொல்லின் கருத்தையும் தமிழில் எழுதுக.

1. பொ(த்)த - ..........................................
2. கிரி(b)பத் - ..........................................
3. பு(ட்)டுவ - ..........................................
4. (g)குருத்துமா - ..........................................
5. (dh)தஹய - ..........................................


06. பின்வரும் பூக்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.

| சூரியகாந்தி | நீல அல்லி | அகத்தி | வில்லிப்பூ |
|---|---|---|---|




07. பின்வரும் உபகரணங்கள், பொருட்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.

| பம்பரவண்டி | விளக்குமாறு | சாந்தகப்பை | சீவுளி |
|---|---|---|---|



08. இலங்கையின் அரச இலச்சினையில் உள்ள பெயர்களை உரிய இலக்கத்தில் எழுதுக.



1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................
6. ..........................................
7. ..........................................

## ஈருடக சைக்கிள்



பன்னிரண்டாவது சர்வதேச சைக்கிள் வடிவமைப்புப் போட்டிக்காக வித்தியாசமான சைக்கிள் ஒன்று வடிவமைக்கப்பட்டிருந்தது. அதுதான் 'ஈருடக சைக்கிள்' (Amphibious Bicycle). இந்த சைக்கிளானது தரையிலும் நீரிலும் ஓடக்கூடியது. அதனாலேயே இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த வடிவமைப்பாளர்களான பின் யு மற்றும் ஜியன் வேங் ஆகிய இருவரும் இணைந்தே இந்த ஈருடக சைக்கிளை வடிவமைத்துள்ளனர்.

தரையில் இந்த சைக்கிளை சாதாரணமாக சைக்கிள் ஒன்றை ஓட்டிச்செல்வது போன்று செலுத்தலாம். அதுவே நீரில் பயணிக்க வேண்டிய தேவை ஏற்படின், சைக்கிள் சக்கரங்களில் பொருத்தப்பட்டுள்ள காற்றுப்பைகளில் காற்றடைக்க வேண்டும். பின்னர் அதனை நீரில் ஓட்டலாம்.




## சுற்றாடல் - விடைகள்

(செப்டெம்பர் 29 , ஒக்டோபர் 06 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01.
1 - √
2 - √
3 - X
4 - √
5 - √

02.
1 - (4)
2 - (5)
3 - (6)
4 - (2)
5 - (1)
6 - (3)

03.
1 - வண்ணத்துப்பூச்சி
2 - பொன் அவரை
3 - நாகமலர்
4 - கொண்ணிலையில்
5 - நத்தை

04.
01 - 2
02 - 3
03 - 1
04 - 2
05 - 2
06 - 1
07 - 3
08 - 2
09 - 3
10 - 2
11 - 3

05.
1 - புத்தகம்
2 - பாற்சோறு
3 - கதிரை
4 - ஆசிரியர்
5 - பத்து

06.
1 - நீலஅல்லி
2 - வில்லிப் பூ
3 - சூரிய காந்தி
4 - அகத்தி

07.
1 - விளக்குமாறு
2 - சீவுளி
3 - சாந்தகப்பை
4 - பம்பரவண்டி

08.
1 - தர்மசக்கரம்
2 - மலரிதழ்
3 - நிறைகலம்
4 - நெற்கதிர்
5 - சிங்கம்
6 - சந்திரன்
7 - சூரியன்

## வினாத்தாள் II இன் விடைகள்

(செப்டெம்பர் 22, 29 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

(01) (i) மழைக்காட்சி (ii) வானம்
(iii) "ஓ ஓ" என்ற சத்தத்துடன் (iv) மரங்கள் அசைந்து ஆடின
(v) வீடு+கூரை (vi) கூரைத்தகடுகள் காற்றில் பறக்கின்றன

(02) (i) பரிசோதனை (ii) சீருடைத்துணிகள்

(03) (i) பெரியவரே! உங்களுக்கு என்ன வேண்டும்?
(ii) கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்.

(04) (i) மயில் (ii) ஆடியது (iii) நீல (iv) அழகிய

(05) (i) தொலைக்காட்சியில் நமக்குப் பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும்.


(06) (i) இளமைக்காலமே கல்வி கற்க சிறந்தது.
(ii) ஒருவரது உள்ளத்தின் சிந்தனை முகத்தில் தென்படும்.

(07) (i) Blackboard (ii) Classroom (iii) Post Office

(08) (ii) புத்தாண்டு வாழ்த்துக்கள் (ii) தயவுசெய்து அமைதியாக இரு
(iii) நான் புத்தகம் வாசிக்கிறேன்

(09) (i) எனக்கு தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
(ii) புகையிரத நிலையத்திற்குப் போவது எப்படி?

| | | | | |
|---|---|---|---|---|
| (10) ii | (11) iii | (12) iii | (13) i | (14) iv |
| (15) iv | (16) ii | (17) iii | (18) ii | (19) ii |
| (20) i | (21) iii | (22) iii | (23) iv | (24) iii |
| (25) iii | (26) ii | (27) iv | (28) iii | (29) iv |
| (30) i | (31) iii | (32) iii | (33) ii | (34) iii |
| (35) iii | (36) ii | (37) (i) 8720 | (ii) 0278 | |
| (38) (i) நூறுகள் (ii)9000 | | (39) 3348 | (40) 8556 | (41) 6/8 |

(42) 

(43) 5cm (44) 824 (45) 204

(46) (i) 08 (ii) 12 (47) 9 கட்டங்கள்

(48) 4.50 (49) 40.00 (50) 35.00

(51) ❋ எழுவாய், பயனிலையுடன் பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.
❋ ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகள் அமைப்பின் தோற்றம்

பண்டையகால தனிமனிதப் பொருளாசையே அடிமைகள் அமைப்பின் தோற்றமாகக் கருதப்படுகின்றது. 5 ஆம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் சுமார் 4000 வருடங்களாக அடிமைச் சமுதாய அமைப்பொன்று உலகில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இத்தாலியின் ரோமாபுரியே அடிமைச் சகாப்தத்தின் கேந்திரமாக விளங்கியது. ஆனால், இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ அடிமை அமைப்புகள் அல்லது வியாபாரங்கள் நடைபெற்றமைக்கான அத்தாட்சிகள் எதுவும் காணப்படவில்லை.

15-16 ஆம் நூற்றாண்டுகளில்கூட, ஆங்காங்கே அடிமை வியாபாரங்கள் நடந்து வந்துள்ளன. இக்காலகட்டத்தில் ஆபிரிக்காவிலிருந்து நீக்ரோ இன மக்களை சிறைப்பிடித்து, கப்பல்களில் ஏற்றி அடிமை வியாபாரம் நடைபெற்றுள்ளது. ஹோர்கின்ஸ் என்ற ஆங்கிலேய வணிகன் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டு, எலிசபத் ராணியால் (1558-1603) 'சேர்' பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளான். கி.பி 1800 வரை அமெரிக்காவில் சுமார் ஒன்றரைக்கோடி அடிமைகள் விற்கப்பட்டுள்ளனர். அடிமைகளை இனங்கண்டு கொள்வதற்காக மாடுகள், குதிரைகளுக்கு குறியீடு போடுவது போல் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் குறியீடுகள் போடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## அடிமைகளின் தோற்றம்

ஆதிகால மனிதன் பழங்கள், கிழங்குகள், விதைகள் போன்ற இயற்கையில் கிடைத்தவற்றை வெறுமனே உண்டு வாழ்ந்தான். பின்னர், அவனது அறிவ் வளர்ச்சியடைய கற்கள், தடிகள், கூரான பொருட்கள் என்பனவற்றை உபயோகித்து மிருகங்களை வேட்டையாடினான். கற்களை உராய்ந்து நெருப்பு மூட்டத் தலைப்பட்டதும், வேட்டையாடிய மிருகங்களையும் கிழங்கு வகைகளையும் சுட்டு உண்ண ஆரம்பித்தான். ஆரம்பகாலத்தில் தன் தேவைக்கு மேலாக எதனையும் மனிதன் சேகரித்து வைத்திருக்க நினைக்கவில்லை. அக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் மிகச் சுதந்திரமாக தன் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து வாழ்ந்து கொண்டிருந்தான்.


கரும்பு ஆலையில் அடிமைகள்

பின்னர், அவனது அறிவு வளர்ச்சி மேலும் ஒருபடி உயர, குழுக்களாக வாழ முற்பட்டான். அவ்வாறு அவன் வாழ்கின்றபோது, தனது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்துகொள்வதன் பொருட்டு, குழுக்களிடையே போட்டி மனப்பாங்கு ஏற்படத் தொடங்கியது. இதனால், ஒரு குழு இன்னொரு குழுவை அடிமைப்படுத்தும் நிலை உருவானது. இதன்போது, வலிமை உள்ளவன் வலிமையில்லாதவனைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. இதுவே அடிமைச் சமுதாயத்தின் தோற்றமாக அமைந்தது.

## அடிமைகள் வழிநடாத்தப்பட்ட முறைகள்

அடிமைகளுக்கு அளவான உணவு வழங்கப்பட்டு, அவர்களிடம் அபரிமிதமான வேலைகள் வாங்கப்பட்டன. வலிமைமிக்க மனிதன் தனக்குக்கீழ் அடிமைகளை வைத்து, தனக்குத் தேவையான சகல வேலைகளையும் செய்துகொண்டான். நாம் இன்று மிருகங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றோமோ, அவ்வாறே அன்று அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர். எஜமான் ஒருவன் எவ்வாறு மிருகங்களை நான்கு கால்களையுடைய சொத்தாகக் கருதுகின்றானோ, அவ்வாறே அடிமைகளை இரண்டு கால்களையுடைய சொத்தாகக் கருதினான்.


தோட்ட வேலைகளுக்காக அடிமைகள் அழைத்துச் செல்லப்படல்

அடிமைகளின் பிள்ளைகளும் பரம்பரையாக அடிமைகளாகவே இருந்துவந்தனர். அடிமைகளைச் சித்திரவதை செய்வதற்கும் கொலை செய்வதற்கும் அக்கால அரசுகள் எஜமான்களுக்கு அனுமதி வழங்கியிருந்தன.


பண்டைய எகிப்திய அடிமைகள்

இத்தாலியில் ஒவ்வொரு ரோமானிய எஜமானும் ஏராளமான அடிமைகளை வைத்திருந்தான். இத்தாலியே அக்காலத்தில் அடிமைகளின் கேந்திரஸ்தானமாக விளங்கியதெனலாம். எஜமானர்கள் அடிமைகளைக்கொண்டு தமது நிலங்களில் வேலை வாங்கி, பெருஞ்செல்வந்தர்களாக வாழ்ந்தனர். துன்பம் நிறைந்த அடிமை வாழ்க்கையிலிருந்து இந்த அடிமைகள் தப்பியோடத் தலைப்பட்டமையானது, அவர்களுக்கு விலங்கிட்டு வைக்கும் நிலையை உருவாக்கியது. அத்துடன், குடும்ப வாழ்க்கையும் அடிமைகளுக்கு மறுக்கப்பட்டிருந்தது. அடிமைகள் மணம் செய்துகொள்ளக்கூடாது, கல்வி கற்கக்கூடாது போன்ற நியதிகள் இருந்தன. எஜமானர்களின் ஏகபோக சொத்தாக அக்காலத்தில் அடிமைகள் மதிக்கப்பட்டனர்.

பட்டினி போடப்பட்ட சிங்கத்துடன் நிராயுதபாணியான அடிமைகளை மோதவிட்டு அக்காலத்து எஜமானர்கள் வேடிக்கை பார்த்தனர். அதுமாத்திரமன்றி, சுட்டெரிக்கும் வெயிலில் மிருகம் போன்று சவுக்கால் அடிக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டனர். வேலை செய்யும் திராணியற்றோர் கொல்லப்பட்டனர். 'ஸ்பாட்டகஸ்' என்ற அடிமை, அடிமைகளைத் திரட்டி எஜமானர்களுக்கும் அரசுக்கும் எதிராகப் போரிட்டுத் தோல்வியடைந்தமை அடிமை எழுச்சியைக் குறிக்கும் வரலாற்று நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

> '5 ஆம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் சுமார் 4000 வருடங்களாக அடிமைச் சமுதாய அமைப்பொன்று உலகில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இத்தாலியின் ரோமாபுரியே அடிமைச் சகாப்தத்தின் கேந்திரமாக விளங்கியது'

## அடிமை நிலைமாற்றம்

காலப்போக்கில் அடிமைகளின் எண்ணிக்கையில் சரிவு ஏற்படத்தொடங்கியது. எஞ்சியிருந்த அடிமைகள் துன்பத்தை எதிர்த்துப் போராடும் நிலை உருவானது. அடிமைகளின் உழைப்பின் மூலம் நிலங்களில் போதியளவு வருவாயைத் தேடிக்கொள்ள முடியாத நிலைக்கு எஜமானர்கள் தள்ளப்பட்டனர். இதனால், படிப்படியாக அடிமைச் சமுதாயம் இல்லாமலாகும் நிலை ஏற்பட்டது. அடிமைகளை அடித்தளமாகக்கொண்ட ரோமானிய சாம்ராஜ்யமும் சரிந்தது.

**-செம்மைத்துளியான்**


ஆபிரிக்க அடிமைகள்

1823 இல் அடிமைகள்

சித்திரவதைக்குட்படுத்தப்படும் அடிமைகள்


அடிமையொன்று சந்தையில் விற்கப்படும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரதான அஞ்சல் அலுவலகக் கட்டடம் (1895)

# தேச எல்லைகளைக் கட
# அஞ்சல் சே

பூவியியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வெவ்வேறு நாடுகளாக வேறுபட்டிருக்கும் இவ்வுலகை, ஒரே கிராமமாக ஒன்றிணைத்தது உலக தபால் சங்கம் (Universal Postal Union) ஆகும். 1874 இல் சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் நிறுவப்பட்ட உலக அஞ்சல் சங்கத்தின் நிறைவு தினத்தை அனுஷ்டிக்குமுகமாக 1969 ஆம் ஆண்டு ஜப்பான் டோக்கியோ நகரில் கூடிய உலக அஞ்சல் சங்க மாநாட்டின்போது, உலக அஞ்சல் சங்கத்தின் நிறைவு நாளான ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி உலக அஞ்சல் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வருடந்தோறும் 150 இற்கும் அதிகமான நாடுகள் உலக அஞ்சல் தினத்தை பல்வேறு விதங்களில் அனுஷ்டிக்கின்றன. சில நாடுகளில் இத்தினம் தொழில் விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் இத்தினத்தில் அஞ்சல் துறையில் பல்வேறு புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய தபால் தயாரிப்புக்கள் வெளியிடப்படுவதோடு, புதிய சேவைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அத்துடன், இத்தினத்தில் விசேட அஞ்சல் தின வைபவங்களும் பணியாளர் கௌரவிப்புகளும் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.


UPU இலச்சினை

## உலக அஞ்சல் சங்கத்தின் தோற்றம்

உலக நாடுகளுக்கிடையே அஞ்சல் சேவையானது உலக அஞ்சல் சங்கத்தின் மூலமாகவே நடைபெறுகின்றது. 1874 ஆம் ஆண்டு 'பொது அஞ்சல் சங்கம்' என்ற பெயரில் நிறுவப்பட்ட உலக அஞ்சல் சங்கமானது, 1874 ஒக்டோபர் 9 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 'பேர்ன்' உடன்படிக்கையின் பின்னர் 'உலக அஞ்சல் சங்கம்' என பெயர் மாற்றம் பெற்றது. 1969 ஆம் ஆண்டு உலக அஞ்சல் நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிறுவனமாகப் பரிணாமம் பெற்றது. உலக அஞ்சல் சங்கத்தில் 192 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. 1974 ஆம் ஆண்டு இலங்கை இதில் அங்கத்துவம் பெற்றது. உலக அஞ்சல் சங்கத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மனி, அரபு, சீனமொழி, ஸ்பானியம், போர்த்துக்கேயம் மற்றும் ரஷ்ய மொழிகளில் நடைபெறுகின்றன.




## உலக அஞ்சல் சங்கத்தினால் கிடைக்கும் சேவைகள்

உலகின் ஒவ்வொரு நாடும் தன்னாதிக்க இறைமையுள்ள சுதந்திரமான நாடுகள் என தமக்குள் தேச எல்லைகளைப் பிரித்துக்கொண்டு அந்த எல்லைகளைக் கடப்பதற்கு பல விதிமுறைகளை வகுத்திருந்தாலும், 'உலகம் அஞ்சலுக்காக எந்தவொரு வரையறையையும் விதிக்காத ஒரே பூமியாகக் கருதப்படுகின்றது' எனும் கருதுகோளுக்கமைய, அங்கத்தவர்களின் பூரண சம்மதத்துடன் வரையறைகளின்றி அஞ்சல் சேவையை செயல்வடிவம் பெறச் செய்தமையானது, உலக மக்கள் யாவரும் பெற்ற மாபெரும் வெற்றியாகும்.



சுமார் 50,000 இற்கும் அதிகமான அஞ்சல் அலுவலகங்களையும் 60 லட்சம் பணியாளர்களையும் கொண்டு முழு உலகையும் தொடர்புபடுத்தி பௌதீக (கடிதம் மற்றும் பொதிகள்), நிதி (காசுக்கட்டளை, முத்திரை, பணக் கொடுப்பனவு போன்றவை) மற்றும் இலத்திரனியல் (மின்னஞ்சல், தொலைநகல், இணையத்தளச் செயற்பாடுகள்) என மூவித பொருள் மற்றும் சேவைகளை வழங்கும் உலக அஞ்சல் வலைப்பின்னலானது இன்றுள்ள நிலைக்கு முன்னேறி இருக்கின்றமையானது உலக அஞ்சல் சங்கத்தின் பாரிய வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

## உலக அஞ்சல் சங்கத்தின் பிரதான அமைப்புக்கள்

**1. உலக தபால் கொங்ரஸ்**

இது உலக அஞ்சல் சங்கத்தின் அதிஉயர் பீடமாகும். சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் இதில் அடங்குவர். நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், நிறைவேற்றுச் சபை, ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் என அனைவரும் தெரிவு செய்யப்படுவது கொங்ரஸ் மூலமாகவே. இதனைத்தவிர, பல்வேறு கட்டளைச் சட்டங்களுக்குத் தேவையான பணம் வழங்கலும் இதன் மூலமே நடைபெறும்.

**2. நிறைவேற்றுக்குழு**

கொங்ரஸின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், நீதி நிர்வாகம் சம்பந்தமான பிரச்சினைகள் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்வினை மும்மொழிதல் இப்பணியகத்தின் கடமைகளாகும்.

**3. அஞ்சல் கல்வி ஆலோசனைக்குழு**

அஞ்சல் சேவை பரிபாலனம், தேவையான நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதோடு, அங்கு எதிர்நோக்கும் முரண்பாடுகளை ஆராய்ந்து தீர்வு காண்பதே இந்த ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகளாகும்.

**4. சர்வதேச பணியகம்**

சங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் தொடர்புபடுத்தி வெளிப்படுத்தல், யாப்பு சீர்திருத்தம் குறித்து ஆலோசனை வழங்கல், தொழில்நுட்ப மற்றும் நிதி உதவித் திட்டங்களில் ஈடுபடுதல், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தபால் நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்குதல், தொழில்நுட்ப உதவிகளையும் நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்குதல் ஆகிய பணிகளை இப்பணியகம் மேற்கொள்கின்றது.

## உச்சி மாநாடு

உலக அஞ்சல் சங்கத்தின் சகல அங்கத்துவ நாடுகளும் பங்குபற்றும் உச்சி மாநாடு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். இதன் இறுதி மாநாடு, கடந்த 2008 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நடைபெற்றதோடு, அடுத்த மாநாடு எதிர்வரும் 2012 இல் கட்டார் நாட்டின் தோஹா நகரில் நடைபெறவுள்ளது.





தபால் சேவையாளர் தொப்பி





கொழும்பு பொதி போக்குவரத்து


தபால் தராசு ஒன்று


ஒரு கடிதத்தராசு


மோஸ் சமிக்ஞை உபகரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திரைப் பாவனையின் ஆரம்பம்

இங்கிலாந்தில் வாழ்ந்த கல்வியாளரான ஸ்ரீமத் ரோலண்ட் ஹில் அவர்களால் 1837 இல் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பெறுபேறாக, 1840 மே மாதம் 6 ஆம் நாள் உலகின் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்டது. அதில் அப்போதைய பிரித்தானிய அரசி விக்டோரியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுமதி 1 பென்ஸ் ஆகும்.

# டந்த சவை

அந்த முத்திரை பெனி ப்ளெக் (Penny Black) என அழைக்கப்பட்டது. முத்திரையை பயன்படுத்துவதில் அக்காலத்தில் மக்களிடையே பெரும் அக்கறை காணப்பட்டது. முத்திரைப் பாவனையோடு பிரித்தானிய தபால் சேவையில் சாதனைகளைக் கண்ட ஏனைய நாடுகள் தாமும் முத்திரைகளைப் பயன்படுத்தத் தொடங்கின.

**-இரஞ்சித் ஜெயகர்**



...வையாளர் ஒருவரின் தொப்பி

பழமையான தபால் சேவையாளரின் தோற்றத்தை வெளிப்படுத்தும் உருவச்சிலை

பழமையான கடிதத் தராசு ஒன்று



# உலக ஆசிரியர் தினம்

## ஒக்டோபர் 06









**இன்றைய தினம் ஒவ்வொரு மாணவருக்கும் சிறப்பான ஒரு தினம். அதுதான் உலக ஆசிரியர் தினம். உலக ஆசிரியர் தினம் என்றால் ஆசிரியர்களுக்குத்தானே சிறப்பான தினமாக இருக்கும். அது எப்படி மாணவர்களுக்கு சிறப்பான தினம் என்று யோசிக்கிறீர்களா?**

அதாவது, தங்கள் ஆசிரியர்களை கௌரவிப்பதற்கும் நன்றி செலுத்துவதற்கும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலில் இன்று வாழ்க்கையில் உயர் ஸ்தானத்தை அடைந்திருக்கின்ற ஒவ்வொருவரும் தமது ஆசிரியரை நன்றியுடன் நினைவுகூருவதற்கும் வாழ்த்துவதற்குமான மகத்தான வாய்ப்பினை இந்த ஆசிரியர் தினம் வழங்குகின்றது. அதனால்தான் அது மாணவர்களுக்கு சிறப்பான தினமாகக் கருதப்படுகின்றது. ஆனால், ஆசிரியர்களின் பணியானது என்றும் போற்றத்தக்க ஒரு மகத்தான பணியாகும்.

### உலக ஆசிரியர் தின பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (UNESCO) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆகியன 1994 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய, 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி உலக ஆசிரியர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் 06 திகதியே ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் மகத்துவத்தை வருங்காலச் சந்ததியினரும் உணரும் விதமாகவும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் இத்தினத்தில் பாடசாலைகளிலும் உலகளாவிய ரீதியிலும் வைபவங்கள் இடம்பெறுகின்றன.

### ஆசிரியர்களின் மகத்துவம்

எதுவுமே அறியாத பாலர் பருவத்தில் ஒரு பிள்ளையின் வாழ்க்கைப் பயணத்திற்கான முதல் அத்திவாரம் ஓர் ஆசிரியரால்தான் இடப்படுகின்றது. ஏனெனில்,வெறும் ஐந்து வயது பூர்த்தியானதும் பாடசாலையில் சேர்க்கப்படுகின்ற குழந்தைகளை ஆசிரியர்கள் மிகவும் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் தியாக மனப்பான்மையுடனும் செயற்பட்டு, எதுவுமே அறியாத மாணவர்களுக்கு கல்வியோடு நற்பழக்க வழக்கங்களையும் புகட்டி, நற்பிரஜைகளாக உருவாக்க வழியமைக்கின்றனர்.

பாடசாலைப் பருவத்தில் ஆசிரியர்கள் புகட்டும் அறிவுதான் இறுதிவரை நம் ஒவ்வொருவருக்கும் கை கொடுக்கின்றது. பல்வேறு துறைகளில் நாம் முன்னேறி மிளிரவும் வாழ்வில் உயர் ஸ்தானத்தை அடையவும் எமக்கு முதற் துணையாக இருப்பவர்கள் எமது ஆசிரியர்களே. ஒரு சிறந்த மாணாக்கனை உருவாக்கும் மகத்தான பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியரையும் சார்ந்திருக்கின்றது. மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்து அவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வியை வழங்குவதில் ஆசிரியர்களின் பங்கு முதன்மையானது. ஒரு நாட்டின் சிறந்த எதிர்காலத் தலைமுறையானது வகுப்பறையில் ஆசிரியரின் சிறந்த வழிகாட்டலிலேயே உருவாக்கப்படுகின்றது என்பதை ஆசிரியர்கள் நன்கு உணர வேண்டும்.

அவ்வாறே, மாணவர்களும் தங்...

வேண்டும். மாணவர்களாகிய நமது வாழ்க்கைப் பயணத்தை சீர்படுத்துவதற்காகவே, ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து செயற்படுகின்றனர் என்பதை உணர்ந்து பாடங்களைக் கற்பதில் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்களின் சொற்படி நடக்க வேண்டும். அவர்களின் நல்லுபதேசங்களையும் கல்விப் போதனைகளையும் நெறிமுறை தவறாது பின்பற்றினால் உலகம் போற்றும் நற்பிரஜையாக மிளிரலாம் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, ஆசிரியர்-மாணவர் உறவினை மேன்மைப்படுத்தும் விதத்திலான ஒரு சிறு சம்பவத்தை இங்கே நோக்குவோம்.

ஒருமுறை அரிஸ்டோட்ல் தனது மாணவர்களுடன் வரும் வழியில் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் தனது மாணவர்களைப் பார்த்து, "நான் அக்கரை வரை நீந்திச்சென்று ஆற்றில் சுழிகள் உள்ளனவா? என்பதைப் பார்த்து வருகிறேன். அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறினார். ஆனால், மறுகணம் ஒரு மாணவன் ஆற்றில் குதித்து மறுகரை வரை நீந்திச் சென்று திரும்பி வந்து, "ஆசிரியரே! நீரில் சுழிகள் எதுவும் இல்லை. நாம் தைரியமாக ஆற்றைக் கடக்கலாம்" என்று கூறினான். உடனே அரிஸ்டோட்ல், "ஒருவேளை நீ நீரில் குதிக்கும்போது நீரில் சுழி இருந்து நீ அடித்துச் செல்லப்பட்டால் நாம் என்ன செய்வது?" என்று கேட்டார். அதற்கு அம்மாணவன், "ஆசிரியரே! நான் அடித்துச் செல்லப்பட்டால் என்னைப் போன்று சிறந்த ஆயிரம் மாணவர்களை உருவாக்கும் திறன் உங்களுக்கு இருக்கிறது. ஆனால், அதுவே நாம் உங்களை இழந்தால் ஏராளமான மாணவர்கள் பரிதவிக்க நேரிடுமே" என்றான்.

எனவே, தலைசிறந்த ஆசிரியர்களை மாணவர்கள் இழக்க விரும்பமாட்டார்கள். அவ்வாறே, சிறந்ததொரு மாணவரை உருவாக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு ஆசிரியரதும் எதிர்பார்ப்பாகும். ஆகவே, ஆசிரியர்களின் சொல் கேட்டு நல்வழி நடந்து உயர்வு பெற்றிடுவோம்; உயர் வாழ்வுக்கு வழிவகுத்த ஆசிரியரை என்றும் மதித்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, சமூகப் பணிபுரிந்த வீரமாமுனிவர்



இத்தொடர்பில் சமய, சமூகப் பணி புரிந்த பாதிரியார்தான் வீரமாமுனிவர் என்று அழைக்கப்பட்ட ஜோசப் பெஸ்கி என்பவர்.

தமிழகத்தில் இவர் தைரியநாதர் வீரஆரியர், செந்தமிழ் தேசிகர் எனும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். லத்தீன் மொழியில் அமைந்த தம் இயற்பெயரைத் தாமே வட மொழிக் கலப்புடைய தமிழில் தைரியநாதன், வீரஆரியன் என்று மாற்றிக் கொண்டார். காலப்போக்கில் இவற்றில் உள்ள வடமொழிச் சாயலைத் தவிர்க்க எண்ணினார். இதனால், தனது பெயரை வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார்.

பெஸ்கி இத்தாலி நாட்டில் வெனிஸ் மாநிலத்தில் 1680 டிசம்பர் 8 ஆம் திகதி பிறந்தார். இவர் தனது பதினெட்டாவது வயதில் துறவறம் வேண்டி இயேசு சபையில் சேர்ந்தார். 1706 ஆம் ஆண்டு மறையியல் பயிலத் தொடங்கிய இவர் 1709 செப்டெம்பர் மாதத்தில் குருத்துவப் பட்டம் பெற்றார்.

ஜோசப் பெஸ்கி இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்ததன் தலையாய நோக்கம் மதப்பரப்புதலே ஆகும். தமிழகத்தில் வீரமாமுனிவர் முப்பது ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். இவரது சமய, சமுதாயப் பணிகள் விரிவானவை. இதைவிட இவரது தமிழ்ப்பணிகள் ஆழமானவை.

பெஸ்கி அடிகள் தமிழகம் வந்த காலம் தொடக்கம் தமிழ் கற்கத் தொடங்கினார். திருக்குறள், சீவகசிந்தாமணி, கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவற்றை விரும்பிக் கற்றார்.

சிந்தாமணியைப் போல கிறிஸ்தவ மதம் சார்பாக ஒரு காவியத்தை எழுத விருப்பம் கொண்டார். அதன் விளைவாக 'தேம்பாவணி' எனும் நூலை எழுதினார். இந்நூல் 3615 பாடல்களைக் கொண்டது.

தமிழ் காப்பியம் படைக்க முன் வந்தோர் மிகச்சிலரே! இத்தகைய சிலரில் ஒருவரே பெஸ்கி அடிகளார் என்ற வீரமாமுனிவராவார்.

வி.தனுஷிகா குமாரி,
அம்பாக்கோட்டை த.வித்.,
கெங்கல்ல.

தமிழ் மொழியோடு கிறிஸ்தவம் கொண்ட தொடர்பு ஐந்து நூற்றாண்டு காலப் பழைமை கொண்டது.






## எல்லாப் புகழும் இறைவனுக்கே!

இறைவன் இருக்கின்றான்
இன்னல் தீர்க்கின்றான்
மறைவாய் இருந்துகொண்டு
வலிமை தருகின்றான்!

மண்ணையும் ஆள்கின்றான்
விண்ணையும் ஆள்கின்றான்
கண்ணியம் மிக்கோனாய்
மன்னித்து மகிழ்கின்றான்!

அன்பைப் பொழிகின்றான்
அருளைத் தருகின்றான்
அன்னம் படைத்து நிதம்
ஆட்சி செய்கின்றான்!

அறிவை வளர்க்கின்றான்
அச்சம் தீர்க்கின்றான்
பரிவு மிக்கோனாய்
பாசம் அளிக்கின்றான்!

எம்.ஏ.எஃப்.ஃபஸ்னா,
திக்குவல்லை.

## உலக நாடாளுமன்றங்கள்

| | |
|---|---|
| அமெரிக்கா | - காங்கிரஸ் |
| அவுஸ்திரேலியா | - ஃபெடரல் |
| இங்கிலாந்து | - பிரபுக்கள் சபை/மக்கள் சபை |
| இஸ்ரேல் | - நெஸட் |
| இந்தியா | - லோக்சபா, ராஜ்ய சபா |
| கனடா | - மக்கள் சபை/செனட் |
| சீனா | - தேசிய மக்கள் காங்கிரஸ் |
| சுவிட்சர்லாந்து | - ஃபெடரல் அசெம்பிளி |
| சுவீடன் | - ரிக்ஸ்டாக் |
| டென்மார்க் | - போல்கெட்டிவ் |
| தென்னாபிரிக்கா | - ஹதஸ்ஆப் அசெம்பிளி |
| நோர்வே | - ஸ்டோர்டிங் |
| நியூஸிலாந்து | - பிரதிநிதிகள் சபை |
| போலந்து | - சீஜிம் |
| மலேசியா | - தேவான் ரக்யத் மற்றும் நெகாரா |
| ரஷ்யா | - சுப்ரீம் சோவியத் |
| ஜப்பான் | - டயட் |

தொகுப்பு: ஆர்.சசிதரன், க/கந்தகெட்டிய த.வித்., மடுல்கலை.

## தகவல் தொழில்நுட்பக் கலைச்சொற்கள்

| | |
|---|---|
| இலக்கக் கணினி | - Computer Digital |
| வலை | - Web |
| தரவுத்தளம் | - Data Base |
| குமிழி நினைவகம் | - Bubble Memory |
| வலைப்பக்கம் | - Web Page |
| வட்டு | - Disk |
| வன்பொருள் | - Hard Disk |
| மென்பொருள் | - Software |
| இணைய மொழி | - Internet Language |
| வலையமைப்பு | - Net work |
| குறுஞ்செய்தி | - Short Massage Service (SMS) |
| தரவுக் கோப்பு | - Datafile |
| மின்னஞ்சல் | - Electronic Mail (E-Mail) |
| மின் வணிகம் | - Electronic Commerce |
| மின்னணு இசை | - Electronic Music |
| குரல் அஞ்சல் | - Voice Mail |

எம்.எம்.றுக்ஷானா, தரம் - 6, அல்மனாருல் உலூம் ம.வித்., கம்பிரிகஸ்வெவ.

## எனது பாடசாலை

எனது பாடசாலை ஊவா மாகாணத்தில் வெளிமடைப் பிரதேசத்தில் குருத்தலாவை எனும் அழகிய சிற்றூரில் அமைந்துள்ளது. இதன் பெயர் ப/முஸ்லிம் மத்திய கல்லூரி. ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் தேசிய பாடசாலை இதுவாகும்.

எனது பாடசாலையானது பிரதான பாதை, வங்கி, பள்ளிவாசல் ஆகியவற்றுக்கு அருகில் அமைந்துள்ளது இங்கு தரம் ஒன்று தொடக்கம் பதின்மூன்று வரையான வகுப்புகளும் உள்ளன. எனது பாடசாலையின் அதிபர் ஜனாப் ஏ.சமூன் ஆவார்.

இங்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். சுமார் ஐம்பது ஆசிரியர்கள் கல்வி போதிக்கின்றனர். அத்துடன், ஒரு விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வுகூடம், கணினி அறை, வாசிகசாலை என்பனவும் உண்டு. இவற்றை நாம் சிறந்த முறையில் பயன்படுத்துவதோடு, இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் [illegible]றோம்.

எம்.ஐ.எஃப்.சர்மிலா,
தரம் - 10, ப/மு.ம.க. குருத்தலாவை. (தேசிய பாடசாலை)

## பைசா கோபுரம்

இத்தாலி நாட்டில் அமைந்துள்ள பைசா கோபுரமானது, உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. 1173 ஆம் ஆண்டு பைசா நகரின் புனித மரியாள் தேவாலயத்திற்கான மணிக்கூட்டுக் கோபுரமாகவே இதனை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின. இதை பெனானோ பிசானோ என்பவர் வடிவமைத்தார். அக்காலத்தில் பைசா நகரின் செழிப்பை உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் அதைப் பிரமாண்டமாக அமைக்கத் தீர்மானித்தனர்.

பைசா நகர மக்கள் கடல் வழிப்பயணத்தில் மிகச் சிறந்து விளங்கினர். ஜெருசலேம், ஆபிரிக்கா, பெல்ஜியம், பிரித்தானியா, நோர்வே, ஸ்பெய்ன், மொராக்கோ உட்பட பல இடங்களை அவர்கள் வெற்றி கொண்டிருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஒரேயொரு கடும் எதிரியாக விளங்கியது புளோரன்ஸ்தான். இது இத்தாலியின் மற்றொரு நகரமாகும்.

1173 ஆம் ஆண்டு கோபுர நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகிய போதிலும் புளோரன்ஸ் பிராந்தியத்துடனான யுத்தம் காரணமாக அப்பணிகள் நிறுத்தப்பட்டன. 1178 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. மூன்றாவது தளம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது கட்டடம் ஒருபக்கமாக சரிந்திருப்பது வெளிப்படையாகத் தெரியவந்தது. கூடவே 1272 இல் மேலும் நான்கு தளங்கள் நிர்மாணிக்கப்பட்டன. 1275 ஆம் ஆண்டில் புளோரன்ஸுடன் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகியது. இதனால், 1278 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டன. ஒன்பது ஆண்டுகள் நீடித்த இந்த யுத்தம் 1284 ஆம் ஆண்டில் நிறைவுற்றது. 1319 ஆம் ஆண்டில் 'பைசா' கோபுரத்தின் ஏனைய தளங்கள் நிர்மாணிக்கப்பட்டன. 1372 ஆம் ஆண்டில் இறுதி (8) தளங்கள் நிர்மாணிக்கப்பட்டு மணிகளும் பொருத்தப்பட்டன.

ஆனால், 1392 ஆம் ஆண்டில் இக்கோபுரம் புளோரன்ஸ் நகரத்திற்கு விற்கப்பட்டது. இது பைசா மக்களுக்கு பெரும் அவமானமாகியது. பைசா கோபுரம் 1250 வரை வடக்கு நோக்கியே சரிந்திருந்தது. பின்னர் மெதுவாக சுழன்று 1272 ஆம் ஆண்டின் பின்னர் தெற்கு நோக்கி சரியத் தொடங்கியது. படிப்படியாக கோபுரத்தின் சாய்வு அதிகரித்து 1275 ஆம் ஆண்டிலேயே கட்டிட வடிவமைப்பாளர் அன்ரியாடா பொடேன்டரா இக்கோபுரத்தை நிமிர்த்த முடியாது என தெரிவித்தார். 19, 20 ஆம் ஆண்டுகளில் இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முஸோலினி இக்கோபுரத்தை நிமிர்த்த உத்தரவிட்டார். முயற்சி பயனளிக்கவில்லை. இரண்டாம் யுத்த காலத்தில் 'சினைப்பர்' தாக்குதலுக்கு அஞ்சி பைசா நகரின் ஏறத்தாழ சகல கோபுரங்களும் அமெரிக்கப் படையினரால் தாக்கப்பட்டன. சாய்ந்த கோபுரத்தையும் தாக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கடைசி நிமிடத்தில் அத்திட்டத்தைக் கைவிடுமாறு உத்தரவிட்டதனால் சாய்ந்த கோபுரம் தப்பியது. 1990 ஆம் ஆண்டில் இக்கோபுரத்தின் சரிவு மோசமான நிலையை அடைந்தது. அதையடுத்து, இக்கோபுரம் முற்றாக நிலத்தில் சாய்ந்து விடுவதைத் தடுப்பதற்காக பலகோடி ரூபா செலவில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் 43.8cm சரிவு குறைக்கப்பட்டு 1838 ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது. 2001 ஆம் ஆண்டு பைசா கோபுரமானது பார்வையாளர்களுக்காகத் திறந்து விடப்பட்டது.


ம.பர்ஹான்,
தரம் - 10,
ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்.,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் புகழ்பெற்ற மிருகக்காட்சிச்சாலைகள்










**மிருகக்காட்சிச்சாலைகளில் பல்வேறு வகையான மிருகங்கள், பறவைகள், மீனினங்கள், பூச்சியினங்கள் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, வருகின்றன. உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடங்களாகவும் இவை உள்ளன.**

இலங்கையில் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை 1936 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சுமார் 350 இனங்களில் 3000 இற்கு மேற்பட்ட அரிய பல மிருகங்கள், பறவைகள், ஊர்வன, மீனினங்கள், பூச்சியினங்கள் வாழ்கின்றன. 10 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்டுள்ள தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை வருடாந்தம் 1.5 மில்லியன் பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கின்றது.

வரலாற்றில் மன்னர்கள் மாத்திரமன்றி, சில பிரித்தானியப் பிரஜைகளும் இலங்கையில் மிருகங்களைச் செல்லப் பிராணிகளாகப் பராமரித்து வளர்ப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர். 1920 இல் ஜோன் ஹேகன்பெக் (John Hagenbeck) தேசிய விலங்கியல் பூங்காவை ஆரம்பித்தபோதிலும், இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் அது மூடப்படவே, 1939 இல் மேஜர் அவுப்ரே வெய்ன்மென் (Major Aubrey Weinman) என்பவரின் நிர்வாகப் பொறுப்பில் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

பின்னவலை, உடவளவை போன்ற இடங்களில் யானைகளைப் பராமரிப்பதற்கென்றே, சரணாலயங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆதிகாலம் முதல் மனிதன் மிருகங்களை வேட்டையாடி, அவற்றின் மாமிசத்தைப் புசித்து வாழ்ந்தபோதிலும் அவன் தனக்கடுத்தபடியாக விரும்புவதும் இரக்கங் காட்டுவதும் மிருகங்களைத்தான். அந்த வகையில் உலக நாடுகள் அனைத்திலும் உயிரியல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு மிருகங்கள், பறவைகள், மீனினம், ஊர்வன அன்பாகப் பராமரிக்கப்பட்டு, பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் அமைந்துள்ள மிருகக்காட்சிச்சாலை தென்னிந்தியாவிலேயே புகழ் பெற்றதாகும். தமிழகத்தில் வண்டலூரிலும் உயிரியல் காட்சியகம் மிகவும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சிகாகோவில் உள்ள லிங்கன் மிருகக்காட்சியகம் அமெரிக்காவிலுள்ள உயிரியல் பூங்காக்களில் மிகவும் பெரியதாகும். இங்கு பாலூட்டிகள், ஊர்வன, பறவைகள், காட்டு மிருகங்கள் எனப் பல்வேறுபட்ட உயிரினங்களைக் காணலாம்.







அமெரிக்காவில் வொஷிங்டன் நகரிலுள்ள மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மிருகங்கள் பற்றிய தகவல்கள் அவ்வப்போது இணையத்தினூடாக, வெளியிடப்படுகின்றன. இங்குள்ள வுட்லண்ட் பார்க் உயிரியல் பூங்காவில் 300 இற்கும் மேற்பட்ட வகையைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கொலரோடாவில் 80 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள விலங்கியல் பூங்காவில் சுமார் 35000 மிருகங்களைப் பார்வையிடலாம். அமெரிக்க விலங்கியல் மீன் வளர்ப்புக் கழகம் தமது உயிரினங்கள் வளர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இதனைக் கண்காணிப்பதோடு, உலகில் அழிந்து வரும் உயிரினங்களுக்கு புத்துயிர் கொடுப்பதற்கென்றே, இப்பூங்காவில் ஒரு பகுதி இயங்கி வருகின்றது.

சேஸ்டர் என்னும் நகரில் 1999 இல் அமைக்கப்பட்ட விலங்கியல் பூங்காவில் வனவிலங்குகளோடு, மனிதன் எவ்வாறு வாழ்வது என்பது பற்றி சுமார் 60 வருடகால அனுபவ அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவில் சின்சினாட்டி நகரில் 1875 இல் அமைக்கப்பட்ட விலங்கியல் பூங்கா தன்னகத்தே உள்ள விலங்குகள், பறவைகள் பற்றிய தகவல்களை இணையத்தளத்தின் மூலம் வழங்கிக் கொண்டிருக்கின்றது.





சண்டியாகோவில் விலங்கியல் கழகத்தின் பராமரிப்பில் இயங்கி வரும் விலங்கியல் காட்சியகத்திலுள்ள விலங்குகள் அதிசயமானவையெனக் கருதப்படுகின்றன. முற்றிலும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் விலங்கினங்களை, எவ்வாறு பாதுகாக்க வேண்டுமென்ற ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. இங்குள்ள மிருகங்கள் தன்னிச்சையாக இயங்கவும் வாழவும் கூடிய வகையில் அவை சுதந்திரமாக பூங்காவில் நடமாட விடப்பட்டுள்ளன.

கெனடாவின் டொரொன்டோவிலுள்ள விலங்கியல் பூங்காவில் ஏதாவதொரு செடியை அல்லது விலங்கை நமது பெயரில் பூங்காவில் வளர்க்கும் வசதிகள் உண்டு. அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், அது நமக்குச் சொந்தமாகிவிடும். அதனை நம்முடையதாக நினைத்து அவர்கள் அன்போடு அதனை வளர்ப்பார்கள். அடிக்கடி அந்தச் செடி அல்லது மிருகம் பற்றிய விபரங்களை அவர்கள் நமக்கு அனுப்பிக்கொண்டே இருப்பார்கள்.

வருங்காலத்தில் மிருகங்கள் எப்படியிருக்கும் என்பதை ஜேர்மனியிலுள்ள ஹானோவர் விலங்கியல் பூங்காவிற்கு நேரில் சென்று அல்லது இணையத்தளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். ஜப்பானிய விலங்கியல் பூங்காவில் விலங்குகள் கூட்டங்கூட்டமாக சுதந்திரமாக நடமாட விடப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் ஜீப்களில் கண்ணாடிகளை மூடிய வண்ணமே இவற்றைக் காணலாம்.

**ஐ.ஏ.ஸத்தார்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க/பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி இஸட்.எம்.எம்.நளீமின் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதிகளாக ஆரம்பக்கல்வி ஆலோசகர் திருமதி.உதேனி வரகாகொட மற்றும் முன்னாள் ஆரம்பக்கல்வி ஆலோசகர் திருமதி ஏ.எச்.ஸபீலா உம்மா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.


*(படமும் தகவலும்: தலவின்னை நளீம்)*




இவ்வார பாடத்தினூடாக, வாய் குறித்து நோக்குவோம். அதில் வாயின் அமைவிடம், தோற்றம் என்பன பற்றி விசேடமாகப் பார்ப்போம். வாயில் பிரதான அம்சமாகக் காணப்படுவது உதடு ஆகும். மனிதனில் அழகை வெளிப்படுத்துவதில் உதடு பிரதான இடத்தைப் பெறுகின்றது.

சிலரின் உதடுகள் தடிப்பாகவும் கனமாகவும் அமையப் பெற்றிருக்கும். இன்னும் சிலரின் உதடுகள் மென்மையாகவும் வசீகரமானதாகவும் இருக்கின்றன.

உதடுகள் மூலம் புன்னகை, அச்சம், பயங்கரம், சிரிப்பு, சோகம், வேதனை, கோபம் போன்ற பல உணர்வுகளைப் பிரதிபலிக்க முடியும். இதற்கமைய, பல்வேறு வகையான உதடுகளை வரைந்து பயிற்சி பெறுவோம்.






கிண்ணியா-05 ஐச் சேர்ந்த முஹாஜிரீன் அன்சார்-ஜெஸிமா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் தஸ்னீம், 15.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: எம்.றுஸ்மில், கிண்ணியா-05)*






நாவலப்பிட்டியைச் சேர்ந்த கனகரத்தினம்-சரவேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹரிகரன், 27.09.2010 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் ஆஞ்சநேயர் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: டீ.கோகிலா)




கொழும்பு, கொம்பனித்தெருவைச் சேர்ந்த சுந்தர் ராஜா-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி கம்சாயினி, 30.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் அனைவரும் கர்த்தரின் ஆசிபெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: அபி)*




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



டீ.ஷஹீர்,
தரம் - 3, ஸ்ரீ ஜயவர்தனபுர இ.கல்.,
ஸ்ரீ ஜயவர்தனபுர.



கே.வினோதஷன்,
தரம் - 8^A, அக்கரப்பத்தனை த.ம.வித்.,
அக்கரப்பத்தனை.



எம்.ஆத்திஃப், தரம் - 11^B,
தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.



டீ.அப்ரத், தரம் - 2,
சமீரகம மு.வித்., சமீரகம.



ஆர்.ஜக்ஷல்யா, தரம் - 8^B,
புனித கப்ரியல் ம.கல்., ஹட்டன்.



இ.மிதுனன், தரம் - 2,
பூண்டுலோயா த.ம.வித்.,
பூண்டுலோயா.



ஜே.சகாய பென்சன், தரம் - 9^B,
புனித அந்தோனியார் ஆ.ம.வித்.,
கொழும்பு-13.



இ.திலக்சன், தரம் - 5,
ஒட்டுசுட்டான் ம.கா.வித்.,
ஒட்டுசுட்டான்.



ஏ.ஜஸீர், தரம் - 6^A,
நஸ்ரியா ம.கல்., சிலாபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அனுபவம்



அந்தப் பாடசாலையில் புதிதாகச் சேர்ந்திருந்தாள் மாலா. நகரத்தில் படித்தவள். அவளின் தந்தையின் உத்தியோக மாற்றம் காரணமாக, அந்த ஊருக்கு வந்திருந்தனர். ஆசிரியர் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் அவளே முன்னின்று பதில் சொன்னாள். அதோடு, வகுப்பிலும் அவளே முதல் மதிப்பெண் பெற்றாள். இதனால், அது வரை முதல் மதிப்பெண் பெற்று வந்த கபிலன் மனம் வருந்தினான். நாளாக நாளாக அவன் மனப்பாரம் அதிகமாகியது.

ஒருநாள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் கபிலன் சோகமாக வருவதை மாலா கவனித்துவிட்டாள். ''நான் நன்கு படிக்கிறேன், முதல் மார்க் வாங்குகிறேன் என்றுதானே வருத்தப்படுகிறாய் கபிலா?''

''ஆமாம் மாலா. ஆனால், நான் பொறாமைப்படவில்லை. நானும் நன்குதான் படிக்கிறேன். இத்தனை நாள் முதல் மாணவன் என்று பெயரெடுத்த எனக்கு, இப்போது அந்த இடத்தை விட்டுக்கொடுப்பது மிக வருத்தமாக இருக்கிறது. அத்துடன், மற்ற மாணவர்களும் என்னைக் கேலி செய்கின்றனர். பெற்றவர்களும் என்நிலை தெரியாமல், நான் படிக்காமல் ஊர் சுற்றுவதால்தான் முதல் ரேங்க் எடுக்கவில்லை என்று திட்டுகின்றனர்'' என்று அழுதான் கபிலன்.

அப்போது மாலா கண்ட காட்சி அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ''அதோ பார் கபிலா... என் அப்பாவும், உன் அப்பாவும் சிரித்துப் பேசிக்கொண்டு வருகிறார்கள்''

''ஆமாம்.உன் அப்பாவை என் அப்பாவுக்கு எப்படித் தெரியும்?''

அப்போது இருவரும் அருகில் வந்துவிட, மாலாவின் தந்தை தன் மகளை கபிலனின் அப்பாவுக்கு அறிமுகப்படுத்தினார்.

''ஓ.... என் மகன் சொல்லும் மாலா நீதானா?''

''ஆமாம் அங்கிள், என் அப்பாவை உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இவன் என் ஸ்கூல் மேட். நானும் இவனும் ஒன்றாக ஏ.எல் படித்தோம். ஒரே ஹொஸ்டல், ஒரே அறை. வேலைக்குச் சென்றதும் தொடர்புகள் இல்லாமல் போய்விட்டது. இப்போது ஏற்படுத்திக் கொண்டோம்''

''நீங்கள் எங்கே வேலை செய்றீங்க அங்கிள்?''

''வங்கியில் கிளார்க்கா இருக்கேம்மா''

''நீங்களும் ஏ.எல், என் அப்பாவும் ஏ.எல்தான். நீங்க இன்னும் கிளார்க்காத்தான் இருக்கீங்க. ஆனால், என் அப்பா ஒரு வங்கிக்கு மெனேஜரா பதவி உயர்வு பெற்று இங்கு வந்திருக்கார். அதுக்கு என்ன காரணம் அங்கிள்?''

''நான் சொந்த வீடு, பக்கத்துக் கிராமத்துல நிலம் அப்படின்னு இருந்ததால் மாற்றம் வேண்டாம்னுட்டு, பதவி உயர்வுக்கு முயற்சி செய்யாம இருந்தேன். ஆனால், உன் அப்பா புரமோஷன்ல எங்கெங்கேயோ போய், இப்ப மெனேஜரா வந்திருக்கான். அதுக்கு என்ன இப்ப?''

''அப்படி என் அப்பா பல ஊர்களுக்கும் போனதாலதான், எனக்கு நிறைய உலக விஷயங்களை தெரிஞ்சிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், நீங்கள் சொந்த விஷயங்களுக்காக ஊரைவிட்டே வெளியில போகாம இருந்துட்டீங்க. அதுக்காக கபிலன் முதல் மாணவனா வரலேன்னு அடிக்கிறதும், திட்டுறதும் தப்பு இல்லையா? எனக்கு நிறைய வாய்ப்புகளைக் கொடுத்தவர் என் தந்தைதான். நானும் கடினமாக உழைத்து, முதல் மாணவியா இருக்கேன். எப்பவுமே போட்டி இருந்தாத்தான் வளர முடியும். நான் வந்த பின்னர் பாருங்கள். கபிலன் ஏற்கனவே பெற்ற மதிப்பெண்களைவிட கூடுதலாகவே பெற்றிருக்கிறான். காரணம் போட்டிதான். நீங்க உற்சாகப்படுத்தி ஊக்குவிச்சா அவன் மீண்டும் முதல் மாணவனாக நிச்சயம் வருவான்''

''மாலா, படிப்புல மட்டும் இல்லம்மா... நடைமுறை வாழ்க்கையிலும் நீ முதலாவதாக இருக்கிறாய். இனி நான் கபிலனைக் குறைகூற மாட்டேன். பிழை என்னிலும் இருக்கிறது என்று உணர்ந்துகொண்டேன். ஆனால், அது நிவர்த்தி செய்ய முடியாத குறை அல்ல. என் கபிலன் மீண்டும் முதல் மாணவனாக வருவான்'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் கபிலனின் தந்தை.




# விருந்தினர்களை உபசரிப்பதில் மகிழ்ச்சி

இன்று பொம்மை வான்காவின் பிறந்தநாள்! என் அருமை விருந்தாளிகளே, உங்கள் வரவு நல்வரவு ஆகுக! பொம்மை வான்கா சிவப்புச் சட்டை போட்டு நடமாடியபடியே மகிழ்வுடன் மேலும் கூறியது. ''நண்பர்களே! அனைவருக்கும் தின்பண்டங்கள் வேண்டிய அளவு இருக்கின்றன. புத்தம்புதிய இலைகளைக்கொண்டு தயாரித்த அருமையான சூப்; அத்துடன், அருமையான, மிகவும் சுத்தமான மணலால் செய்த கறிவடைகள், பல நிறக் காகிதங்களால் செய்த இனிப்புப் பணியாரங்கள்; அப்புறம், இனிய சுவையான தேநீர்! மிக மிக நல்ல கொதி நீரால் தயாரிக்கப்பட்டது''

விருந்தாளிகள் அறை முழுவதும் நிறைந்து விட்டார்கள். எல்லோருக்கும் முன்னே பாய்ந்து வந்தது தொப்பை பருத்த கட்டைப் பம்பரம். ''சுற்றுமுற்றும் பார்த்தபடி எங்கே அந்தப் பிறந்தநாள்காரன்? நல்ல கூட்டாளிகளோடு விழாக் கொண்டாடுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்''

மேலும் இரண்டு பொம்மைப் பெண்கள் வந்தார்கள். ஒருத்தி, இளநீல விழிகள் உள்ள ஆனியா. அவளுடைய மூக்கு கொஞ்சம் சிதைந்திருந்தது. கரிய விழிகள் கொண்ட மற்றவள் காத்தியா. அவளுக்கு ஒரு கை இல்லை. அவை இரண்டும் மிக மிடுக்காக வந்து பொம்மை சோபாவில் உட்கார்ந்துகொண்டன.

''வான்கா என்னென்ன தின்பண்டங்கள் வைத்திருக்கிறான் என்று பார்ப்போம். என்னவோ பிரமாதமாகப் பெருமை அடித்துக்கொள்கிறான். அவன் கூறிய தின்பண்டங்களைப் பொறுத்தவரையில் எனக்குச் சந்தேகந்தான்'' என்றாள் ஆனியா.

''ஆனியா, நீ எப்போதும் பொம்மை வான்காவைக் குறை சொல்லிக் கொண்டே இருக்கின்றாய்? நீ எப்போதும் சண்டைக்காரிதான்'' என்று அவளைக் கடிந்துகொண்டாள் காத்தியா.

பொம்மைப் பெண்கள் இருவரும் கொஞ்ச நேரம் வாய்ச்சண்டை போட்டுக் கொண்டார்கள். கைச்சண்டை போடவும் தயாரானார்கள்.

அப்போது மிகவும் பழசாகிவிட்ட பொம்மைக் கோமாளி அந்தக் கணத்தில் தனது ஒற்றைக்காலினால் கிந்திக் கிந்தி வந்து அவர்களைச் சமாதானப்படுத்தியது.

அத்துடன், ''எல்லாம் அருமையாக இருக்கின்றன. இளஞ்சீமாட்டியாரே. நன்றாகக் களி கொண்டாடுவோம். எனக்கு ஒரு கால் இல்லைத்தான். ஆனாலும், பரவாயில்லை. பம்பரம் கூடத்தான் ஒற்றைக்காலில் என்னமாய்ச் சுழன்று ஆடுகிறது பாருங்கள் சீமாட்டியாரே. வணக்கம், பம்பரமே!''

''வணக்கம்! ஆமாம், உன்னுடைய ஒரு கண்ணில் அடிபட்டிருப்பது போல் தெரிகிறதே, ஏன்?''

''ஒன்றுமில்லை.... நான் சோபாவிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். அடக் கடவுளே! சரி இவ்வளவோடு போயிற்றே''

அப்போது, பொம்மை பித்ருஷ்கா பல விருந்தாளிகளை அழைத்துக் கொண்டு வந்தான். ''எங்கே அந்தப் பிறந்தநாள்காரன் வான்கா, இந்தா வான்கா விருந்தாளிகளை வரவேற்று நன்றாக உபசரி. தேநீர் பருக அவர்களுக்கு ஒரே ஆசை. இதில் அனைவரும் வாத்துப் போல'' என்று குதூகலம் பொங்கப் பொரிந்து கொட்டினான்.

''நண்பரே பித்ருஷ்கா, நல்ல விருந்தாளிகளை உபசரிப்பதில் எங்களுக்கு எப்போதுமே மகிழ்ச்சிதான். உட்காருங்கள் விருந்தினர்களே. தயவுசெய்து உட்காருங்கள்'' என்றான் வான்கா.

அப்புறம் வந்தன கரடியும் முயலும் சாம்பல் நிற ஆட்டுகுட்டியும் கொண்டை வாத்தும் சேவலும் ஓநாயும். விருந்தில் எல்லோருக்கும் ஓரளவு இடம் கிடைத்தது. அல்யோனுஷ்காவின் செருப்பும் துடைப்பமும் இறுதியில் வந்தன. ஓர் இடமும் காலி இல்லை என்பதை இரண்டும் கவனித்தன.

''பரவாயில்லை. நான் மூலையில் நின்று கொள்கிறேன்'' என்றது துடைப்பம்.

செருப்போ, ஒன்றும் சொல்லாமல் சோபாவுக்கு அடியில் புகுந்துகொண்டது. தேய்ந்து போனதுதான் என்றாலும் அது மிகவும் மரியாதைக்குரிய செருப்பு. நுனியில் இருந்த பொத்தல்தான் அதற்குக் கொஞ்சம் கூச்சத்தை உண்டாக்கிற்று. அட அது பரவாயில்லை. சோபாவுக்கு அடியில் யாரும் அதைக் கவனிக்க மாட்டார்கள். செருப்பு தனக்குள் எண்ணிக்கொண்டது.

பிறந்தநாள்காரன் பொம்மை வான்கா திடீரென ஆரவாரப்பட்டது. வாத்தியங்களை இசைக்கும்படி கட்டளையிட்டது. அனைத்து விருந்தாளிகளுக்கும் திடீரென்று குதூகலம் பொங்கிற்று. ஒரே மகிழ்ச்சியாக கொண்டாட்டம் நன்றாகவே தொடங்கியது. அனைத்தும் ஒரே கோலாகலமாக இருந்தது.

பொம்மை ஆனியாவும் காத்தியாவும் இனிய குரல்களில் கலீரென்று நகைத்தார்கள். குண்டுக் கரடி துடைப்பத்துடன் நடனம் ஆடிற்று. சாம்பல் நிற ஆட்டுக்குட்டி கொண்டை வாத்தோடு ஆடிற்று. கோமாளிப் பொம்மை கரணங்கள் அடித்து வித்தை காட்டியது.

அப்போது பம்பரம் பாய்ந்து வந்தது. இதைப்பார்த்த ஸ்பூனும் ஓடிவந்தது. இரண்டுமாக நடனம் ஆடத்தொடங்கின. இதனைப் பார்த்த செருப்புக்கு இருப்புக் கொள்ளவில்லை. சோபாவுக்கு அடியிலிருந்து வெளியே வந்து துடைப்பத்தின் காதோடு சொல்லிற்று; ''எனக்கு உங்கள் மேல் நிரம்பப் பிரியம், துடைப்பாச்சியாரே. ஆனால், அதை நான் வெளிக்காட்டிக் கொள்வதில்லை'' துடைப்பம் இனிமையாகக் கண்களை மூடிக்கொண்டு வெறுமே பெருமூச்சு விட்டது. தன்மேல் மற்றவர்கள் பிரியம் காட்டியது அதற்கு நன்றாகவே பிடித்திருந்தது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் ராஜாவுக்கும் அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**රාජා:** **අම්මේ, මම හවස කමල්ගේ ගෙදර යන්නද?**
அம்மே, மம ஹவச கமல்கே கெதற யன்னத?
ராஜா: அம்மா, நான் பின்னேரம் கமலுடைய வீட்டுக்குப் போகவா?



**අම්මා:** **ඇයි පුතා?**
எய் புதா?
அம்மா: ஏன் மகன்?

**රාජා:** **කමල්ගේ අයියා සරුංගලයක් හදලා. ඒක අරින්න.**
கமல்கே அய்யா சருங்கலயக் ஹதலா. ஏக அரின்ன.
ராஜா: கமலுடைய அண்ணா ஒரு பட்டம் செய்திருக்கிறார். அதை விடுவதற்காக.

**අම්මා:** **එයාලගේ වත්තේ සරුංගල් අරින්න ඉඩ නෑනේ.**
எயாலகே வத்தே சருங்கல் அறின்ன இட நேநே.
அம்மா: அவர்களுடைய தோட்டத்தில் பட்டம் விட இடம் இல்லையே.

**රාජා:** **ඔව්. එයාලා සරුංගල් අරින්න මුහුදු වෙරළට යනවලු.**
ஒவ். எயாலா சருங்கள் அரின்ன மூஹுூது வெரளட யனவலு.
ராஜா: ஆம். அவர்கள் பட்டம் விடுவதற்கு கடற்கரைக்குப் போகிறார்களாம்.



**අම්මා:** **කවුද කමලුයි අයියයිද?**
கவுத கமலுய் அய்யய்த?
அம்மா: யார் கமலும் அண்ணாவுமா?

**රාජා:** **නැහැ. එයාලගේ අම්මයි තාත්තයිත් යනවලු.**
நெஹெ. எயாலகே அம்மய் தாத்தய் யனவலு.
ராஜா: இல்லை. அவர்களுடைய அம்மாவும் அப்பாவும் போகிறார்களாம்.

**අම්මා:** **එහෙමද? එහෙමනම් පරෙස්සමෙන් ගිහින් එන්න.**
எஹெமத? எஹெமநம் பரெஸ்ஸமின் கிஹின் என்ன.
அம்மா: அப்படியா? அப்படியென்றால் கவனமாகப் போய்வாருங்கள்.



**රාජා:** **මගේ හොඳ අම්මා.**
மகே ஹொந்த அம்மா.
ராஜா: என்னுடைய நல்ல அம்மா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

***உதாரணம்:*** அம்மா, நான் பின்னேரம் கமல் வீட்டுக்குப் போகவா?
**අම්මේ, මම හවස කමල්ගේ ගෙදර යන්නද?**

i. தோட்டத்தில் பட்டம் விட இடம் இல்லையே.
..........................................................................................

ii. பட்டம் விடுவதற்கு கடற்கரைக்குப் போகிறார்கள்.
..........................................................................................

iii. கவனமாகப் போய்வாருங்கள்.
..........................................................................................






**Have been** மற்றும் **Has been** முதலான கூட்டு வினைச்சொற்களைக் (Compound Verb) கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால வினை முற்று வாக்கியங்களை (Present Perfect Tense) மேலும் பயில்வோம்.

(அ) He has been in India for two years.
இரண்டு வருடகாலமாக, அவன் இந்தியாவில் இருந்திருக்கின்றான்.

(ஆ) He has been to India twice.
இரண்டு தடவைகள் அவன் இந்தியாவுக்குப் போயிருக்கின்றான்.

(இ) He has been in India for the last two years.
கடந்த இரண்டு வருடகாலமாக அவன் இந்தியாவில் இருந்து வருகின்றான்.

(ஈ) He has been in India since 2008.
2008 ஆம் ஆண்டு முதல் அவன் இந்தியாவில் இருந்து வருகின்றான்.

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில் கையாளப்பட்டுள்ள 'for two years'/'twice'/ 'for the last two years'/'since 2008' முதலான சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறான கருத்துக்களை வாக்கியங்களில் பிரதிபலிப்பதை அவதானித்துக் கொள்ளலாம்.

***★ மேலும் உதாரணங்களை இங்கே பார்ப்போம்.***

(உ) Ananda has been to Canada twice.
ஆனந்தா இரண்டு தடவைகள் கனடாவுக்குப் போயிருக்கிறான்.

(ஊ) Ambiga has been in England for two years.
இரண்டு வருடகாலமாக அம்பிகா இங்கிலாந்தில் வசித்திருக்கின்றாள்.

(எ) My brother has been in America for the last two years.
கடந்த இரண்டு வருடங்களாக எனது சகோதரன் அமெரிக்காவில் இருந்து வருகின்றான். (வசித்து வருகின்றான்)

(ஏ) My brother has been in America since 2008.
2008 ஆம் ஆண்டு தொடக்கம் எனது சகோதரன் அமெரிக்காவில் இருந்து வருகின்றான். (வசித்து வருகின்றான்)

(ஐ) My sister has been a member in that organization for a long time.
நீண்ட காலமாக என்து சகோதரி அந்தச் சங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்து வருகின்றாள்.

(ஒ) She has been a member in that organization since 1999.
1999 ஆம் ஆண்டு தொடக்கம் அவள் அந்தச் சங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்து வருகின்றாள்.

(ஓ) His father has been in hospital for the last one week.
அவனுடைய தந்தை கடந்த ஒரு வாரகாலமாக வைத்தியசாலையில் இருந்து வருகின்றார்.

(ஔ) His father has been in hospital since last Friday.
அவனுடைய தந்தை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் வைத்தியசாலையில் இருந்து வருகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சாவேஸ் வெற்றி

வெனிசுவெலாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். ஆயினும், இதற்கு முன்னைய நாடாளுமன்றத் தேர்தலை பகிஷ்கரித்திருந்த பிரதான எதிர்கட்சியான ஜனநாயகக் கட்சி இம்முறை தேர்தலில் நாடாளுமன்ற ஆசனங்களில் 1/3 என அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



வெனிசுவெலாவில் கடந்த 12 வருடங்களாக ஜனாதிபதி சாவேஸ்தான் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்து வருகின்றார். 1998 ஆம் ஆண்டில்தான் சாவேஸ் முதலாவதாக ஜனாதிபதியாகத் தெரிவானார். அன்று தொடக்கம் இன்று வரை வெனிசுவெலாவில் 16 தேர்தல்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஃபிஜிக்கு தற்பாதுகாப்பு பயிற்றுனர்

**ஃபிஜி தீவுகளில் ஆட்சியிலிலுள்ள அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு தற்காப்புக்கலையை பயிற்றுவிப்பதற்காக சீனா தற்பாதுகாப்புக்கலை பயிற்றுனர் ஒருவர் ஃபிஜிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.**






**'தாய் ச்சி' எனப்படும் சண்டைக்கலையைப் பயிற்றுவிக்கக்கூடிய ஆசிரியர் ஒருவரையே சீனா இவ்வாறு அனுப்பி வைத்துள்ளது.**

**தற்பாதுகாப்பு, மனக்கட்டுப்பாடு, பதற்றத்தை நீக்குதல் போன்றவற்றிற்கான ஒரு பயிற்சியாகவே மேற்படி பயிற்றுவிப்புக்கள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதன்படி, அரசாங்கத்தில் உள்ளவர்களது மனோதிடத்தை அதிகரிப்பதன்மூலம் அவர்களின் செயற்பாட்டுத்திறனை மேம்படுத்த முடியும் என்பதே இதன் குறிக்கோளாக உள்ளது என்றும் கருதப்படுகின்றது.**




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அமெரிக்காவின் கணினி வைரஸினால் ஈரானின் கணினிகள் செயலிழப்பு

**'ஸ்டுக்ஸ்நெட்' என்ற பெயரைக் கொண்ட கணினி வைரஸ் தாக்குதலினால் ஈரானிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலையிலுள்ள 30,000 இற்கும் மேற்பட்ட கணினிகள் செயலிழந்தன. அமெரிக்காவிலிருந்து இணையத்தின் வழியே செலுத்தப்பட்டிருந்த இந்த வைரஸினால் ஈரானிலுள்ள ஏராளமான கணினி கட்டமைப்புக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டபோதிலும் ஈரானின் முதலாவது அணு நிலையமாகக் கருதப்படுகின்ற 'புஷேர்' அணு நிலையத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.**





**ஈரானின் முதலாவது அணு ஆலையை செயலிழக்கச் செய்வதற்கென கணினி மென்பொருட்களினால் உருவாக்கப்பட்ட 'சைபர்' குண்டொன்றை இணையத்தின் வழியே செலுத்துவதற்கு அமெரிக்காவின் கணினி வல்லுனர்கள் சிலர் ஆயத்தமாகி வருவதாக சில வாரங்களுக்கு முன்னரே தகவல்கள் வெளியாகியிருந்தன.**

**இணைய வலையமைப்பிற்கென, போடப்பட்டுள்ள பாதுகாப்பையும் வேறு பாதுகாப்பு உபாயங்களையும் வெற்றிகரமாகத் தாண்டி சூட்சுமமாக தாக்குதலை நடத்தக்கூடிய நுணுக்கமான வழிமுறையைக் கொண்ட மென்பொருளினாலேயே குறித்த வைரஸ் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# மியன்மாருக்கு அழுத்தம் கொடுக்கவும் - ஐ.நா.செயலாளர்



எதிர்வரும் நொவெம்பர் மாதம் 7ஆம் திகதி மியன்மாரில் நடைபெறவுள்ள தேர்தல் நேர்மையான,நியாயமான தேர்தலாக நடைபெற வேண்டுமாயின், அந்நாட்டின் இராணுவ ஆட்சியின் மீது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென, ஆசியான் அமைப்பிலுள்ள நாடுகளின் தலைவர்களிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மியன்மாரின் அரசியல் சூழ்நிலை முழு ஆசியான் வலயத்திற்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த அதேசமயத்தில் மியன்மார் தலைவர்களுக்கும் ஆசியான் நாடுகளின் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே, ஐ.நா.செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அற்லஸ் கேள்வி - 276

**கேள்வி:** வெனிசுவெலா ஜனாதிபதி முதன்முதலாக எத்தனையாம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவானார்?

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 276,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 274 இன் சரியான விடை: 4 பேர்

**பரிசு பெறுவோர்**

எம்.சல்மான் பாரிஸ்,
132, புதிய வீதி, கல்முனைக்குடி-14.

எஸ்.அர்ஜுனன்,
62/7, காலிங்க மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு-05.

சூ.விமலேசன்,
129, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

# மெஸப்பெத்தேமிய நாகரிகம்



✱ மெஸப்பெத்தேமிய நாகரிகம் ஆரம்பமாகியது எந்த நதிக்குஅருகில்?

**யூப்ரடீஸ் மற்றும் டைகிரீஸ் நதிகளுக்கு அருகாமையில் ஆரம்பமாகியது.**

✱ மெஸப்பெத்தேமிய நாகரிக ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட இனங்கள் என்ற அடிப்படையில் குறிப்பிடப்படுகின்ற பெயர்கள் என்ன?

**சுமேரியர், பபிலோனியர்**



✱ மெஸப்பெத்தேமியா மக்களிடம் காணப்படுகின்ற விசேட திறமைகள் என்ன?

**வெள்ளி, தங்கம் போன்றவற்றால் பெறுமதியான ஆபரணங்களைத் தயாரித்தல், மரத்தளபாடங்கள், இசைக்கருவிகள் போன்றவற்றைத் தயாரிப்பதுடன் கணிதவியல், கோள் மண்டலம் பற்றிய விடயங்களிலும் விசேட திறமைகளைப் பெற்றிருந்தனர். நாட்காட்டியைக் கண்டுபிடித்தனர். நீர் கடிகாரத்தையும் அறிமுகப்படுத்தினர்.**

✱ கட்டடக்கலையில் சிறந்து விளங்கிய மெஸப்பெத்தேமியர் வடிவமைத்து நிர்மாணித்தவை எவை?

**அரச மாளிகைகள்**

## எகிப்திய நாகரிகம்



✱ நைல் நதிக்கு அருகாமையில் உருவாகிய நாகரிகம் எது?

**எகிப்திய நாகரிகம்**



✱ எகிப்தில் மரணமடைவோரின் சடலங்களை (மம்மி) பதப்படுத்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம் என்ன பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது?

**பிரமிட்**

✱ எகிப்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள பழைமையான, மிக உயர்வான வடிவமைப்புக்கள் எவை?

**அபுமிம்பல் ஆலயத்தில் காணப்பட்ட அரச சிலை, ஃபீனிக்ஸ் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோபையிழந்துள்ள கொமன்வெல்த் போட்டிகள்




இந்தியாவின் டெல்லி நகரில் இம்மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) விளையாட்டுப் போட்டிகளில் முன்னணி வீரர்கள் சிலர் கலந்து கொள்ளாமையினால் போட்டிகள் சோபையிழந்து காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

போட்டி ஏற்பாடுகளில் குளறுபடிகள், பாதுகாப்புப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளின் மத்தியில் முன்னணி வீரர்கள் சிலர் வேறு காரணங்களைக் கூறி இப்போட்டிகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்துள்ளனர்.



அநேகமானோர் உடல்நிலையைக் காரணம் காட்டியே ஒதுங்கியுள்ளனர். குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து நாடுகளைச் சேர்ந்த தடகள போட்டியாளர்கள் சிலர், அவுஸ்திரேலியாவின் தட்டெறியும் வீராங்கனை டேனி சாமுவெல்ஸ், ஒலிம்பிக் செம்பியனான 400 மீற்றர் ஓட்ட வீரர் கிறிஸ்டைன், கொமன்வெல்த் 1500 மீற்றர் போட்டி செம்பியன் லிசா டொபிரிஸ்கி ஆகியோருடன் உலகப்புகழ் உசேன் போல்ட் போன்ற வீரர்களும் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொமன்வெல்த் போட்டிகளில் இலங்கை வீரர்கள்

இந்தியாவில் நடைபெறுகின்ற கொமன்வெல்த் போட்டிகளில் இலங்கை சார்பாக கிட்டத்தட்ட 100 போட்டியாளர்கள் அளவில் கலந்து கொள்கின்றனர். அதற்கமைய, அவ்வவ் போட்டிகளில் இலங்கை சார்பாக எத்தனை போட்டியாளர்கள் கலந்து கொள்கின்றனர் என்பதை கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| நீச்சல் | 10 | றக்பி | 22 |
| மெய்வல்லுனர் | 15 | துப்பாக்கி சுடுதல் | 05 |
| அம்பெறிதல் | 04 | ஸ்குவாஷ் | 02 |
| பெட்மின்டன் | 06 | மேசைப்பந்து | 06 |
| குத்துச்சண்டை | 07 | டென்னிஸ் | 04 |
| சைக்கிளோட்டம் | 05 | பளுதூக்கல் | 10 |
| ஜிம்னாஸ்டிக் | 04 | ரெஸ்ட்லிங் | 02 |

# கிரிக்கெட் வியாபாரமாகிவிட்டது

## -அர்ஜுன ரணதுங்க

**இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டவருமான அர்ஜுன ரணதுங்க பேட்டியொன்றில் தெரிவித்துள்ள சில கருத்துக்களின் சாராம்சம் இங்கு வழங்கப்படுகின்றது.**



"இன்று கிரிக்கெட் துறையானது விளையாட்டு என்பதற்கு அப்பால் வியாபாரமாக மாறியுள்ளது. நாங்கள் விளையாடும்போது கிரிக்கெட் மீது எமக்கு மிகவும் ஆர்வம் இருந்தது. அன்றைய நாட்களில் கிரிக்கெட் விளையாடும்போது சிறிதளவு பணம்தான் எமக்குக் கிடைத்தது. சாதாரண ஹோட்டல்களில்தான் தங்கினோம். ஏனென்றால் நாட்டுக்காக விளையாடுவதையிட்டு நாம் பெருமையடைந்தோம்.

நான் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருக்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை வீரர்கள் இங்கிலாந்துடனான போட்டிக்கு செல்வதா? அல்லது இந்தியாவில் ஐ.பி.எல் போட்டிக்கு செல்வதா? என்பதில் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபோது, அநேகமானோர் ஐ.பி.எல் போட்டியையே தெரிவு செய்தனர். அன்றுதான் இலங்கை வீரர்கள்மீது நான் வைத்திருந்த மரியாதை இல்லாமல் போனது.

இன்றைய இளம் வீரர்கள் பலர் வியாபார ரீதியிலேயே கிரிக்கெட்டைப் பயன்படுத்துகின்றனர். இது விளையாட்டுத்துறைக்கு நல்லதல்ல. மேலும் இவர்கள் ஆடுகளத்திற்கு ஏற்ப துடுப்பெடுத்தாடுவதில்லை. தடுத்தாட வேண்டிய பந்துகளைக்கூட அடித்தாட முயல்கின்றனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஈவு இரக்கமின்றித் தாக்குதல் தொடுக்கும் துடுப்பாட்ட வீரராகவே தம்மைக் காட்டிக்கொள்ள முயல்கின்றனர்.

# கொமன்வெல்த்தில் இலங்கையின் நிலை...?

இம்முறை கொமன்வெல்த் போட்டிகளில் பல போட்டியாளர்கள் கலந்து கொள்கின்ற போதிலும் சுசந்திகா ஜயசிங்ஹ, சுகத் திலகரட்ன, ஸ்ரீயானி குலவன்ஸ ஆகியோர் இல்லாதிருப்பது இலங்கைக்கு பதக்கங்கள் மீது அதிக நம்பிக்கையை, எதிர்பார்ப்பை வைக்க முடியாத நிலையையே தோற்றுவித்திருப்பதாகக் கருதப்படுகின்றது.





இருப்பினும், பளுதூக்கும் வீரரான சிந்தன விதானகே மீதுதான் அநேகரின் நம்பிக்கை பதித்துள்ளது. 2006 ஆம் ஆண்டில் இறுதியாக மெல்பேர்னில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டிகளில் சிந்தன தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார். எனவே, இந்தமுறை கொமன் வெல்த் போட்டிகளில் இவர் தங்கமோ, வெள்ளியோ, வெண்கலமோ வெல்லக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



மேலும், 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையில் சாதனைகளை நிகழ்த்தியுள்ள சமிந்த விஜேகோன் மீதும் எதிர்பார்ப்பு உள்ளமையால் கொமன்வெல்த் போட்டியில் இவர் முதல் மூன்று இடங்களுள் ஏதாவது ஓர் இடத்தைப் பெறுவார் என்று கூறப்படுகின்றது.

அவ்வாறே, டென்னிஸ் போட்டிகளில் ஹர்ஷன் கொடமானேயும் ஏதேனும் ஒரு பதக்கத்தை வெற்றி கொள்ளக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்


பெயர்:..............................
முகவரி:..............................
..............................
பாடசாலை:..............................
வகுப்பு:..............................
திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியைத் தாக்கவுள்ள சூரியப் புயல்








அதிசக்தி வாய்ந்த 'சூரியசக்திப் புயல்' 2012 ஆம் ஆண்டளவில் பூமியைத் தாக்கக்கூடும் என்று விண்ணியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பல மடங்கு பலமானதாக அதாவது, 10 கோடி ஹைட்ரஜன் குண்டுகளின் சக்திக்கு இணையானதாக அந்த சூரியசக்திப் புயல் இருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அண்மையில் அமெரிக்காவில் ஒரு பெரிய 'எரிகல் மழை' பொழிந்தது. அது, சூரியசக்திப் புயலின் முன்னோட்டம்தான் என்று நாஸா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். வீசப் போகும் சூரிய சக்திப் புயலானது பூமியின் ஒட்டுமொத்த மின் தொடர்பை இழக்கச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இந்த சூரியசக்திப் புயல் குறித்து 2006 ஆம் ஆண்டிலிருந்தே நாஸா கண்காணித்து வருகிறது. இதற்கு முன்னர் 1859,1921 ஆம் ஆண்டுகளில் வீசிய சூரியசக்திப் புயலால் உலகில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின்போது, தந்தித் தொடர்பு வயர்கள் பெருமளவில் சேதம் அடைந்தன. கௌடாவின் க்யூபெக் மாகாணத்தை இதேபோன்ற பயங்கர சூரியப் புயல் 1989 ஆம் ஆண்டு தாக்கியது. இதனை அடுத்து தொடர்ச்சியாக 9 நாட்கள் கெனடா ஸ்தம்பித்திருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், 2012 ஆம் ஆண்டு வீசவுள்ள சூரியசக்திப் புயல் அவற்றை விடப் பலமானதாக இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


கொடைக்கானல், இந்திய வான் ஆராய்ச்சிக்கழக விஞ்ஞானி சுந்தாராமன் கருத்துத் தெரிவிக்கையில்;

"2012 டிசம்பர் 12 ஆம் திகதி இயல்புக்கு மாறாக, பயங்கர சூரியப் புயல் ஏற்படவுள்ளது. இதைத் தடுக்க உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிக உஷ்ணக் கதிர்கள் மற்றும் மின்காந்த அலைகளைத் தாங்கி உருவாகி வரப்போகும் இந்த சூரியப் புயல், பூமியை நெருங்கும்போது பயங்கரமான பாதிப்புகள் ஏற்படும். சூரியனில் இருந்து வெளியேறும் உஷ்ணக் காற்று பூமியைத் தாக்கும். இதனால், உலகம் முழுவதும் உள்ள மின்சாரம், விண்கலங்கள், செயற்கைக்கோள், தொலைத்தொடர்பு, செல்போன் ஆகிய அனைத்தும் ஸ்தம்பிதமடையும்'' என்கிறார்.

எவ்வாறாயினும், இன்றைய 'டிஜிடல்' உலகத்தில் சூரியசக்திப் புயல் ஏற்படுத்தப்போகும் உண்மையான தாக்கம் குறித்து, விஞ்ஞானிகளால் எதையும் உறுதியாகக் கூற முடியாதுள்ளது. எனவே, சூரியசக்திப் புயல் வருமுன் அதிலிருந்து காப்பது அல்லது அதைத் தடுப்பது குறித்து விஞ்ஞானிகள் தற்போதிலிருந்தே ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 6 மாதங்கள் விண்வெளியில் தங்கிவிட்டுத் திரும்பினால் 80 வயது பலவீனம்!





விண்வெளியில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அங்கு சென்று 6 மாதங்கள் வரை தங்கியிருந்து விட்டு பூமிக்குத் திரும்பும் ஒரு வீரரின் உடல்நிலை 80 வயதுடைய ஒரு முதியவரின் உடல்நிலையைப் போன்று பலவீனமடைந்திருக்கும் என அண்மையில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க மார்கெட் பல்கலைக்கழக பேராசிரியர் ரொபர்ட் பிட்ஸ் கூறியதாவது;

''சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஆறு மாதங்கள் தங்கிவிட்டு பூமிக்குத் திரும்பும் விண்வெளி வீரர்களிடம் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, விண்வெளிக்கு செல்வதற்கு முன்பும் பூமியை வந்தடைந்தவுடனேயும் அவர்களின் முழங்கால் பின் தசை பரிசோதிக்கப்பட்டது. அப்போது விண்வெளிக்குச் செல்வதற்கு முன்பிருந்ததைவிட, விண்வெளிக்குச் சென்று வந்ததன் பின்னர் அவர்களின் பின் தசை நார்களில் 40 சதவீத சக்தி குறைந்திருப்பது அவதானிக்கப்பட்டது. மனிதனின் உடல் சமநிலை, உடல்நிலை ஆகியவற்றை இந்த தசைதான் தீர்மானிக்கின்றது. இவ்வாறிருக்க, விண்வெளிக்குச் சென்று திரும்பும் வீரர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பில் இருந்து மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப, ஓரிரு மாதங்கள் எடுக்கும். இது தற்காலிகமான பாதிப்பு என்றாலும், அது வீரர்களின் உடல்நிலை குறித்து கவலைகொள்ளச் செய்கின்றது'' என்றார்.

# இறுதிப் பயணத்திற்குத் தயாராகும் 'டிஸ்கவரி'



சர்வதேச விண்வெளி மையத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்புவதற்காக டிஸ்கவரி, அட்லாண்டிஸ், எண்டீவர் ஆகிய விண்கலங்களை அமெரிக்க விண்வெளி மையமான நாஸா இதுவரை பயன்படுத்தி வந்தது.

கடந்த 30 ஆண்டுகளாக விண்வெளிப் பயணங்களில் ஈடுபடுத்தப்பட்டு வந்த மேற்படி விண்கலங்கள், அடுத்த ஆண்டுக்குள் குறித்த பணியிலிருந்து முற்றாக நிறுத்தப்படவுள்ளன. இனிவரும் காலங்களில் விண்வெளிப் பயணங்களுக்காக புதிய ரக விண்கலங்களை உருவாக்கும் முயற்சியில் நாஸா இறங்கியுள்ளது.

இந்நிலையில், டிஸ்கவரி விண்கலம் விண்வெளிக்கான தனது இறுதிப் பயணத்தை எதிர்வரும் நொவெம்பர் 1 ஆம் திகதி மேற்கொள்கிறது. இதற்காக, இந்த விண்கலம் கடந்த வாரம் ஃப்ளோரிடாவில் உள்ள கேப்கெனவரல் ஏவுதளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறுதிப் பயணத்துக்காக டிஸ்கவரி விண்கலம் எடுத்துச் செல்லப்படுவதை நாஸா ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் சோகத்துடன் பார்வையிட்டனர். இந்த வரிசையில் அடுத்து எண்டீவர் விண்கலம் தனது இறுதிப் பயணத்தை அடுத்த ஆண்டு பெப்ரவரியில் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விண்கலங்களின் பயன்பாடுகள் ஒவ்வொன்றாக முடிவுக்கு வருவதால், நாஸாவில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களும் அடுத்த மாதம் 1 ஆம் திகதியுடன் வேலையிழக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புவிக்கு அருகில் வியாழன், யுரேனஸ்



நமது ஞாயிற்றுத் தொகுதி அங்கத்தவர்களான வியாழன், யுரேனஸ் ஆகிய இரண்டு கிரகங்களும் பூமிக்கு மிக அருகில் வந்திருக்கின்றன. இதில் வியாழக் கிரகம் 1963 ஆம் ஆண்டில் ஒருமுறை பூமிக்கு மிக அருகில் வந்துள்ளது. அதன் பின்னர் இப்பொழுதுதான் மீண்டும் அது பூமியை நெருங்கியுள்ளது. சூரியன் மறைந்த பின்னர் வடக்கில் வியாழன் பிரகாசமாகக் காட்சி அளிக்கும்.

இவ்வாறே, யுரேனஸ் கிரகத்தையும் கண்டுகொள்ளலாம் என்பதோடு, தொலைநோக்கி மூலம் இவ்விரண்டு கிரகங்களையும் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



உன்னில் அடங்கியிருக்கும் அத்தனை அம்சங்களும் நன்று. 'தொழில்நுட்பத்தால் பாதிப்படையும் மூளையின் செயற்திறன்' எனும் கட்டுரை இன்றைய காலத்துக்குப் பொருத்தமானது. 'ஓவியம் வரைவோம்' தொடர் எமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அத்தோடு, முன்னரைவிட 'விளையாட்டுச் செய்திகள்' புதுப்பொலிவுடன் மிளிர்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

-எம்.முஷ்ரிஃப்,தெல்கஸ்வத்த, மல்லவபிடிய.

நான், தரம்-5 இல் கல்வி கற்கிறேன். நீ, சுமந்து வந்த தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களைச் செய்து பயிற்சி பெற்றதால், பரீட்சைக்கு இலகுவாக முகம் கொடுக்க முடிந்தது. உனக்கு எனது பலகோடி நன்றிகள் உரித்தாகட்டும். தொடர்ந்தும் வெளிவந்து என் போன்ற மாணவர்களுக்கு உதவி புரிய வேண்டுகிறேன்.

-ஆர்.எம்.சாஜித், ஹிஸ்புல்லா வீதி, செம்மண்ணோடை-07.




விஜய்யே! உன்னில் பிரசுரமாகும் அனைத்துத் தகவல்களும் விரும்பத்தக்கவை. அதிலும், 'இராமாயணம்', 'கண்களுக்கும் நாவுக்கும் விருந்தளித்து நோயை ஏற்படுத்தும் உணவுகள்', 'பறவைகளின் கூடுகளும் அற்புதமே!' போன்ற ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தன.

-எஃப்.நஸ்லா, தரம் - $8^{X}$, ஸாஹிரா தே.பாட., மாவனல்லை.

பற்பல அறிவுசார் விடயங்களை சுமந்து வரும் என் இனிய விஜய்யே! நீ சுமந்து வரும் விடயங்கள் யாவும் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் நன்மை அளிக்கும் என நம்புகிறேன். அத்துடன், விஜய்யில் குறை கூறுவதற்கு ஒன்றுமில்லை. 'யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்' வரலாற்றுத் தொடர் சூப்பரோ சூப்பர். நீ மென்மேலும் வளர எனது மனமார்ந்த நன்றிகள்.

-பு.வசந்தன், பாடசாலை வீதி, தேவபுரம்.

'நோயை ஏற்படுத்தும் உணவுகள்', 'வரலாற்றிலிருந்து', 'கப்பல் போக்குவரத்தின் ஆரம்பம்', 'இலங்கையின் வங்கித் தொழில் வரலாறு' போன்றவை எனக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. உன்னில் மேலும் பல தகவல்களை சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-ஏ.ஹகீம், தரம்-8, ஹமீட் அல்-ஹுசைனி கல்., கொழும்பு-12.

'புவி வெப்பம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது' எனும் கட்டுரை புவி வெப்பம் அதிகரிப்பதைத் தடுக்க நம்மால் செய்யக்கூடியவை எவை என்று எம்மை சிந்திக்கத் தூண்டியது. புவி வெப்ப அதிகரிப்பு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

-கோ.கோபிநாத், பூணாகலை வீதி, பண்டாரவளை.

ஒவ்வொரு புதன்கிழமையும் 'விஜய்'யில் புதிய பல விடயங்களைத் தருகின்றமைக்கு எனது மனம் கனிந்த நன்றிகள். 'கல்வி முகாமைத்துவம்', 'தொடர் கதை', 'விண்வெளித் தகவல்கள்', 'விளையாட்டுத் தகவல்கள்' உட்பட அனைத்து விடயங்களும் மிகவும் பயன்மிக்கவை.

-எஃப்.லப்ரியா, கா/ஸாஹிரா தே.பாட., கிந்தோட்டை.

'கல்வி முகாமைத்துவம்' எனும் பகுதி மிகவும் பயனளிப்பதாக உள்ளது. 'இலங்கையின் வங்கித்தொழில் வரலாறு', 'பறவைகளின் கூடுகளும் அற்புதமே!', 'தொழில்நுட்பத்தால் பாதிப்படையும் மூளையின் செயற்திறன்' ஆகியன என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

-ஐ.இஷாரா, அல்-மனார் ம.கல்., மருதமுனை-02.

இந்த இதழில் (06.10.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.10.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.10.13 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 281**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 1




## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து எழுதுக — 3

| | |
|---|---|
| nows ______ | tinghling ______ |
| locud ______ | uns ______ |
| orandot ______ | airn ______ |

## சரியான விடையில் கோடிடுக — 4

1. சட்சரவு, சச்சரவு, சட்ச்சரவு
2. கன்ணம், கண்ணம், கன்னம்
3. செஞ்சிளுவை, செஞ்சிலுவை, சென்சிலுவை
4. காலைப்பொழுது, காலைப்பொலுது, காலைப்பொளுது
5. உளவன், உழவன், உலவன்

## அறிவுக்கு விருந்து 278 விடைகள்

போட்டி: 01




போட்டி: 03



போட்டி: 04
1. கரம் 2. திங்கள்
3. கோது 4. குளவி

போட்டி: 05
1. captain 3. spoon
2. magic

## 5

(A) பொருத்தமான சொல்லைக்கொண்டு குறள்களைப் பூர்த்தி செய்க

1. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் ........................ என்றும் இடும்பை தரும்.
(தீயொழுக்கம்/ஒழுக்கம்)

2. ........................ அறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
(உன்நெஞ்சு/தன்நெஞ்சு)

(B) இடைவெளியை நிரப்புக

(மிதித்தாரை/களவு/நெஞ்சு)

1. நீர் ஆழம் கண்டாலும் ........................ ஆழம் காண முடியாது.
2. ........................ கடியாத பாம்பு உண்டோ?
3. உளவு இல்லாமல் ........................ இல்லை.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 278 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜெ.கிர்ஷான்,
A 38/54, ரட்ணம் வீதி, கொழும்பு-13.

**போட்டி: 02**
எஃப்.விஃப்ரா,
247/3/1, அவிசாவளை வீதி, வெல்லம்பிடிய.

**போட்டி: 03**
ஆர்.சஜித்ரா,
56, நுவரெலியா வீதி, தலவாக்கலை.


**போட்டி: 04**
எம்.அக்ரம், 47/53, ஜே.பி.ஒழுங்கை, புத்தளம்.

**போட்டி: 05**
ஜே.கிதுர்சிஹன்,
36/35, கண்டி வீதி, சுமேதகம, திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்:**


- பாத்திமா சிஹானி, நாச்சியாதீவு.
- எம்.பிரசாத், அக்கரைப்பற்று-04.
- பாத்திமா முஸ்னிபா, வியாங்கல்லை.
- எம்.சியாமளன், பொகவந்தலாவை.
- ஜிதாஃபா ஜெஸ்லி, சாய்ந்தமருது.
- என். சிந்துஜா, மடுல்சீமை.
- மிஷ்ஃபா மிஷ்கத், கொழும்பு.
- யசங்க பிரியதர்ஷன, கல்முனை-01.
- எம்.அஸாம், பொல்கொல்ல.
- ர.ஜோகினி, மீசாலை.

## எத்தனை உள்ளன? — 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயவஞ்சகனின் சதித்திட்டம்



## மந்திரிமனை

யாழ்ப்பாண ராச்சியத்தின் தலைநகராக இருந்த நல்லூரில், அவ்வரசர் காலத்தோடு பொதுவாகச் சம்பந்தப்படுத்தப்படும் ஒரு கட்டடமே மந்திரிமனை ஆகும். போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண அரசு வீழ்வதற்குமுன் அக்கால அமைச்சர் ஒருவரின் இருப்பிடம் இதுவெனக் கூறப்படுகிறது. இக்கட்டடம் இருக்கும் நிலமும், இதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் அரச தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை. அத்துடன், இறுதி மன்னனான சங்கிலி குமாரனுடைய அரண்மனையும் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலும் வேறு பல அரச தொடர்புள்ளவைகளும் இதற்கு அண்மையாகவே அமைந்துள்ளன.

இக்கட்டடம் யாழ்ப்பாண அரச காலத்தைச் சார்ந்தவையெனக் கருதப்பட்டாலும் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியபின், தமது தலைநகரத்தை நல்லூரிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு மாற்றியமைத்தனர். அதன் பின்னர் நல்லூரில் எஞ்சியிருந்த அரச கட்டடங்களும் நிலங்களும் போர்த்துக்கேயரின் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் மேற்கூறிய நிலங்களில் புதிய கட்டடங்களை ஒல்லாந்தர் கட்டிய ஆதாரங்களும் உண்டு. 'மந்திரிமனை' என அழைக்கப்படும் இந்தக் கட்டடமும் இவ்வாறே புதிதாக அமைக்கப்பட்ட அல்லது பெருமளவுக்குத் திருத்தியமைக்கப்பட்ட கட்டடமாகவே இருக்கவேண்டும்.

இக்கட்டடம் தற்போதைய உரிமையாளர்களின் கைக்கு வந்த பின்னரும் கடந்த நூற்றாண்டில் திருத்தவேலைகள் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. எப்படியாயினும், யாழ்ப்பாணத்தில் அதன் காலனித்துவ காலத்துக்கு முற்பட்ட தொடர்புகளைக் கொண்ட, எஞ்சியுள்ள மிகச் சில கட்டடங்களில் ஒன்று என்றவகையில் இது முக்கியத்துவம் பெறுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்வரை இக்கட்டடம், அருகிலுள்ள நட்டநாதர் சிவன் கோயிலுடன் தொடர்புடைய குடும்பமொன்றின் இருப்பிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அக்காலத்திலேயே இதன் பெரும்பகுதி கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது. அண்மைக்காலத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் இக்கட்டடம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.



சங்கிலியை அழிப்பதில் நான் உதவ வேண்டும் என்றால் யாழ்.அரசின் அரியாசனத்தில் நான் அமர வேண்டும். ஆனால், நான் சொன்ன இச்செய்தி அப்பாமுதலிக்கோ, அவன் மருமகன் பரநிருபசிங்கனுக்கோ தெரியாதிருக்க வேண்டும். அவர்களுக்கு ஆசைவார்த்தை காட்டி எமது திட்டத்திற்கு இசைய வைப்பது என்வேலை. இதற்கு என்ன சொல்கிறீர்கள் என்று காக்கைவன்னியன் கூறியதற்கு பிரகன்சா, "நண்பரே! நீர் சொல்வதை ஏற்க நானும் என் அதிகாரிகளும் தயாராகவே இருக்கிறோம். எமக்கு வியாபாரம் நடக்க வேண்டும். எம்மதம் இம்மண்ணில் பரவ வேண்டும். அதற்கு உம் உதவி வேண்டும்" என நயவஞ்சகச் சிரிப்போடு கூறினான். "நல்லது நண்பரே நான் கூறும் திட்டத்தைக் கவனமாகக் கேளும்" என தன் சதித்திட்டத்தைக் கூறத் தொடங்கினான் காக்கைவன்னியன்.

"நீங்கள், இந்த நாடு வந்த புது வணிகர்கள் போல் சிலருக்கு நன்றாக வேடமிட்டு நல்லூருக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அங்கே சென்றதும் சங்கிலி மன்னனிடம் வியாபாரம் செய்ய அனுமதி கோர வேண்டும். மன்னன் மறுத்தால் பறங்கியருக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை எனக் கூறச் சொல்லுங்கள். அப்படியும் மறுத்தால் அவர்கள் வேறு நாட்டினர், நாம் வேறு நாட்டினர். எங்கள் நோக்கம் நாடு பிடிப்பதல்ல; வியாபாரமே என்றும் கூறச்சொல்லுங்கள். அப்பொழுது சங்கிலி மன்னனின் சபையில் நானுமிருப்பேன். சங்கிலி என்மீது அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறான். அந்த வணிகர்களுக்காக நான் பரிந்துரை செய்வேன். அதுபோல் அவன் மந்திரிகளான அப்பாமுதலியும் பரநிருபசிங்கனும்

## யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 15

அரியாலையூர் சி.சிவதாசன்

பரிந்துரை செய்ய நான் கூறிவைப்பேன். இவை யாவும் நிறைவேறும்" எனக் காக்கைவன்னியன் கூறினான்.

அதனைக் கேட்ட பிரகன்சா, "அதனால் எமக்கு என்ன லாபம். நாங்கள் நாடு பிடிக்க வந்தவர்கள். மதத்தைப் பரப்ப வந்தவர்கள். உலகமெங்கும் எங்கள் மதத்தைப் பரப்புவதே எமது நோக்கமாயிருக்கும்போது நீங்கள் கூறுவது எமக்கு என்னவென்று விளங்கவில்லையே?" என காக்கை வன்னியனைப் பார்த்துக் கேட்டான். அங்கேதான் என் திட்டத்தின் முழுவடிவமே தங்கியிருக்கிறது. அது எங்கே உமக்குப் புரியப்போகின்றது. நண்பரே! என் திட்டத்தைக் கூறுகிறேன் கேளும்.நல்லூருக்கு வியாபாரம் செய்யச் செல்பவர்கள் அங்கே வியாபாரத்தில் முழு மூச்சாகச் செயல்படும்போது நாம் யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள காடுகளில் ஆயுதங்களைத் தேக்கி வைக்க வேண்டும். சந்தர்ப்பம் வரும்போது பூநகரிக்கடல் வழியாகவும் வன்னித் தரைவழியாகவும் நல்லூர் நகரின்மீது தாக்குதல் நடத்தி சங்கிலியைச் சிறைப்பிடிக்க வேண்டும்.

**நஞ்சிலும் கொடியோன். பாம்பின் பல்லிலும் பார்க்க விடமுடைய தீயோன். அந்தக் காக்கைவன்னியன் பதவி ஆசையால் தன்னையே மறந்தான். தன் இனத்தையே மறந்தான், தன் மண்ணையே மறந்தான். தன்னலத்திற்காக எங்கிருந்தோ வந்த அன்னியனை நம்பினான். பின்னால் நடைபெறப் போகும் விளைவுகளைப் பற்றி சிறிதேனும் அவன் சிந்திக்கவில்லை.**

அதன்பின்னர் யாழ்ப்பாணத்திற்கு நான் அரசனாவேன். என்னால் உங்கள் எண்ணமெல்லாம் நிறைவேறுமல்லவா?"

"காக்கைவன்னி உன்னை நான் சாதாரணமானவன் என்றல்லவா எண்ணினேன். ஆனால், நீயோ பெரும் புத்திசாலி. உலகையே உன் தீய உள்ளத்தால் ஆளும் வல்லமை உனக்கு நிறையவே உண்டு. உன் திட்டப்படியே நாம் தயாராகின்றோம். நீ அந்த பரநிருபனையும் அப்பாமுதலியையும் தயாராக இருக்கச்சொல்.வெற்றி நம் பக்கம்தான். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் பயணத்தை கொழும்பு நோக்கி ஆரம்பித்தான் பிரகன்சா. அவன் தன் பயணத்தின்போது, 'முட்டாள்! எங்கள் திட்டம் எங்கே இவனுக்குப் புரியப் போகின்றது.இலங்கை முழுவதையும் எம் பறங்கி இனமே ஆள வேண்டும். எங்கும் எங்கள் மதமே பரவ வேண்டும். அதுவரை உன் உதவி எமக்குத் தேவை அதற்கு உன் உதவியை எதிர்பார்ப்பதே எம் வேலை' என பிரகன்சா தன் மனத்தில் மிக வஞ்சகமாக சிந்திக்கலானான்.

ஆனால், நஞ்சிலும் கொடியோன். பாம்பின் பல்லிலும் பார்க்க விடமுடைய தீயோன் அந்தக் காக்கை வன்னியன். பதவி ஆசையால் தன்னையே மறந்தான். தன் இனத்தையும் மறந்தான். தன் மண்ணையும் மறந்தான். தன்னலத்திற்காக எங்கிருந்தோ வந்த அன்னியனை நம்பினான். பின்னால் நடைபெறப்போகும் விளைவுகளைப் பற்றி சிறிதேனும் அவன் சிந்திக்கவில்லை

நல்லூரை வந்தடைந்த அந்தக் காக்கைவன்னியன் அரசியல் ஆசைகாட்டி பரநிருபசிங்கனையும் மாமன் அப்பாமுதலியையும் தன் சதிவலைக்குள் வீழ்த்தினான். அன்று சங்கிலி மன்னன் காக்கைவன்னியனை அழைத்துத் தன் அவையில் அளவளாவிக் கொண்டிருந்தான். அந்த அவையில் அப்பாமுதலியும் பரநிருபனும் கூடவே இருந்தார்கள்.

திட்டமிட்டபடி, அங்கே வருகை தந்த பறங்கிய வணிகர்கள் வியாபாரம் செய்யச் சங்கிலியைப் பணிந்து அனுமதி கேட்டார்கள். அதற்கு சங்கிலி மறுத்தான். அப்போது காக்கைவன்னியன் மன்னன் சங்கிலியோடு நயமாகப் பேசி "இவர்கள் புதியவர்கள். மன்னாருக்கு வந்த பறங்கிகள் அல்ல. வியாபாரம் செய்து எம்மிடம் உள்ள பொருட்களைக் கொள்வனவு செய்து எமக்கும் நன்மை அளிப்பார்கள். இவர்களை நாம் நம்பலாம். வியாபாரம் செய்ய அனுமதியுங்கள் மன்னா" என்று நயவஞ்சகமாகக் கூறினான்.

(தொடரும்....)

'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என்பார்கள். மனஉறுதியுடன் கூடிய முயற்சியால் எதனையும் சாதிக்கமுடியும் என்பதற்கு உதாரணமான நிகழ்வு ஒன்று தாய்வானில் நடைபெற்றுள்ளது.

உள்ளூர்வாசி ஒருவரால் வளர்க்கப்பட்ட பயங்கர விஷப்பாம்பு ஒன்றின் கூட்டுக்குள் சுண்டெலி ஒன்று அதற்கு இரையாகப் போடப்பட்டது. சுண்டெலியை சுவைக்க ஆசைப்பட்ட பாம்புக்கு பெருத்த ஏமாற்றம் மட்டுமல்ல; அதன் ஆயுளும் அத்துடன் முடிந்துவிட்டது. அப்பாவியாகக் காணப்பட்ட சுண்டெலி மனம் தளராமல் உறுதியுடன் பாம்பை எதிர்த்துப் போராடியது. இரண்டுக்குமிடையில் கடும் போராட்டம். சுண்டெலி தனது கூரான பற்களால் பாம்பைக் கண்டபடி கடித்துச் சண்டையிட்டது. 30 நிமிட கடும் சண்டையின் பின்னர் பாம்பு சுண்டெலியுடன் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இறந்து வீழ்ந்தது. பாம்பை வளர்த்தவர்கள் பாம்புக்கு ஒரு சிறந்த சிற்றுண்டியை வழங்குவதாக நினைத்தனர். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக பாம்பைக் கொன்று சுண்டெலி ஒரு மாவீரனாகியது. பாம்பின் விஷம் எலிகளை அழிக்கவல்லது. ஆனால், எலி தனது மனஉறுதியால் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு பாம்பைக் கொன்றொழித்துவிட்டது.

## சுண்டெலியின் சாகசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அளவிலான கணினி ஸ்கேனர்களை நாம் கண்டுள்ளோம். ஆனால், சாதாரண பேனையின் அளவிலான புதிய வடிவிலான 'ஸ்கேனர்' கருவியொன்று அறிமுகமாகியுள்ளமை சிலருக்கு மட்டுமே தெரிந்த விடயமாகும். இதற்கு 'டொக்யூபென்' (Docupen) என்று பெயரிடப்பட்டுள்ளது.

9 அங்குலம் நீளமான இந்த ஸ்கேனர் கருவியை 'ஸ்கேன்' செய்ய வேண்டிய படத்திலோ, பிரதி



## பேனை அளவிலான 'ஸ்கேன்' கருவி

மீதோ வைத்து மேலிருந்து கீழாக ஓர் இழுவை இழுத்தால் போதும் அவற்றை அப்படியே அது ஸ்கேன் செய்துவிடும். ஒரே தடவையில் நூற்றிற்கும் மேற்பட்ட விடயங்களை இவ்வாறு ஸ்கேன் செய்யமுடியும். இவ்வாறு ஸ்கேன் செய்யப்பட்டதை 'யூஎஸ்பி' போட் மூலமாக கணினிக்குத் தொடர்புபடுத்தி பதிவிறக்கம் செய்யமுடியும்.



## CD/DVD தரவுகளை அழிக்கும் கருவி...!


சீடி, டீவிடீ பாவிப்பவர்கள் அவற்றில் பதியப்பட்டுள்ளவற்றைப் பாவனை முடிந்தபின்னர் அழிப்பதற்கு வழியில்லாமல் அப்படியே ஓர் ஓரத்தில் போட்டுவிடுவதுண்டு. ஆனால், இவை இன்னொருவரின் கையில் கிடைத்துவிட்டால் அதிலுள்ள விபரங்களை அவர் அறியக்கூடியதாக இருக்கும். இதனால், சில ரகசிய விபரங்கள்கூட, வெளியாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவேதான், இந்தச் சிக்கலை நீக்கவே புதியதோர் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு சீடீ/டீவிடி டிஸ்ட்ரோயர் (CD/DVD Destroyer) என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்த சீடி/டீவிடி ஒரு சுற்று சுழன்று வருகின்ற ஐந்து செக்கன்களுள் அவற்றிலுள்ள தகவல்கள் அனைத்தும் அப்படியே அழிந்துவிடும்.

## கைபடாமல் இயங்கும் 'புளூடூத் ஐரிங்'





ஐபொட் அல்லது ஐஃபோன் கருவியை கைப்பட இயக்குவதற்குப் பதிலாக கைபடாமலேயே இயக்குவதற்கு வசதியான 'புளூடூத்' மோதிரமொன்று அறிமுகமாகியுள்ளது. பாடல்களை நிறுத்துவது, முன்புறம், பின்புறம் நகர்த்துவது போன்றவற்றை செய்வதற்கும் ஒலியை கட்டுப்படுத்துவதற்கும் இயலுமான நுண்ணிய டச் ஸ்கிரீன் இதில் உள்ளது. இதற்கு 'ஐரிங்' (iRing) என்று பெயரிடப்பட்டுள்ளது.



## Hard Disk ஐ செயலிழக்கச் செய்பவை...!



கணினியின் இன்றியமையாத பகுதியான Hard Disk எத்தகைய காரணங்களினால் செயலிழக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன?

பொதுவாக, Hard Disk ஆனது முழுமையாக செயலிழந்து விடுவது அபூர்வமாக நடைபெறக் கூடியதே. அப்படியும் அது செயலிழக்கின்றதென்றால் கீழ் காணப்படுகின்ற செயற்பாடுகளே அதற்குக் காரணமாக அமைவதுண்டு.

* சரியான வகையில் தொழிற்படக்கூடிய யூபிஎஸ் (UPS-Uninterrupted Power Supply) கருவி பொருத்தப்படாத கணினி அடிக்கடி மின்சாரத் தொடர்பை இழக்குமாயின், அதன் தாக்கம் நேரடியாக Hard Disk இன் தொழிற்பாட்டைப் பாதிக்கும்.
* உரிய படிமுறைக்கேற்ப, கணினியை 'ஷட் டவுன்' (Shut down) செய்யாமல், ஒரேயடியாக ஓஃப் செய்வது அல்லது ரீசெட் செய்வதனால்.
* கணினியை இயக்கிக் கொண்டிருக்கையில் அது கடுமையான அதிர்வுகளுக்குகோ, அசைவுகளுக்கோ ஆளாகும் சந்தர்ப்பங்களால்.
* காந்தம் அல்லது காந்தம் சேர்க்கப்பட்ட பொருட்களை கணினியின் அருகே வைத்திருப்பதனால்.
* 'Hard Disk' இன் மேல்புறமாக, பாதுகாப்பிற்குப் பொருத்தப்பட்டுள்ள உலோகக் கவசத்தை கழற்றி விடுவதால் வெளிச்சூழல் தாக்கங்களுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.
* வைரஸ் புரோகிராம்களின் மூலம் Hard Disk இற்குத் தொடர்புள்ள மென்பொருட்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதால்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 06, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org